விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 077 வள்ளுவர் ஆண்டு 2057 மாசி 22 வெள்ளிக்கிழமை (06.03.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## ஈரான் கப்பலிலிருந்து
# 208 பேரைக் கொழும்புக்கு கொண்டுவர ஏற்பாடு

### மனிதாபிமான ரீதியில் முன்னெடுப்பு
### ஜனாதிபதி அநுர விசேட உரை






(கொழும்பு)

கொழும்புக்கு அருகில் உள்ள ஈரான் கப்பலிலிருந்து 208 பேரையும் கொழும்புக்கு அழைத்து வரப்படுவர் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (04ஆம் பக்கம் பார்க்க)

## வட்டுக்கோட்டையில்
# போதைப்பொருட்களுடன் 10 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது போதைப்பொருட்களுடன் 10 பேர் நேற்று முன்தினம் கைது 15ஆம் பக்கம் பார்க்க

# இறுதிப் போட்டிக்கு இந்தியா தெரிவு




04ஆம் பக்கம் பார்க்க

# சர்வதேச கடற்பரப்புக்குள் மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம்
## இலங்கை மீனவர்களுக்கு எச்சரிக்கை



(கொழும்பு)

இலங்கைக்குச் சொந்தமான கடற்பரப்பைத் தாண்டிச் சென்று மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் எனக் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், நேற்று அனைத்து மீனவ சமூகத்தினரிடமும் 15ஆம் பக்கம் பார்க்க

## வளைகுடாக் கடற்பரப்பில்
# அமெரிக்க எண்ணெய் தாங்கி கப்பல் மீது ஈரான் தாக்குதல்

(தெஹ்ரான்)

வளைகுடாக் கடற்பரப்பின் வடக்குப் பகுதியில் அமெரிக்காவிற்குச் சொந்தமான எண்ணெய் தாங்கிக் கப்பல் ஒன்றின் மீது தாக்குதல் 15ஆம் பக்கம் பார்க்க



# யாழில் காணாமல்போன இரு மீனவர்கள்
## தமிழகத்தில் கரை ஒதுங்கினர்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை, ஊறணி கடற்பகுதியிலிருந்து கடந்த வெள்ளிக்கிழமை மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் இருவர் காணாமல்போன நிலையில் தமிழ்நாடு அரியமான் கடற்பரப்பில் கரையொதுங்கியுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, 15ஆம் பக்கம் பார்க்க

# ஈரான் கப்பலைத் தாக்கியமைக்கு அமெரிக்கா வருத்தப்படும்
## ஈரான் வெளியுறவுத் துறை அமைச்சர்



(கொழும்பு)

இலங்கைக்கு அண்மித்த கடற்பரப்பில் ஈரான் கப்பலை தாக்கியமைக்காக அமெரிக்கா வருத்தப்படும் என ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் அப்பாஸ் அரக்ச்சி எச்சரித்துள்ளார்.

இது குறித்து தனது சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ள அவர் தெரிவித்துள்ள 15ஆம் பக்கம் பார்க்க

## பதற்றங்களுக்கு மத்தியில்
# அமைச்சர் விஜித ஹேரத் அவசரமாக டில்லி பயணம்



(கொழும்பு)

இலங்கை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் நேற்று இரவு அவசரமாக இந்தியத் தலைநகர் புதுடில்லிக்கு பயணமானார்.

சர்வதேச கடற்பரப்பில், இலங்கைக்கு அண் 15ஆம் பக்கம் பார்க்க

## சுன்னாகத்தில்
# தடம்புரண்ட டிப்பர்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியில் டிப்பர் வாகனம் ஒன்று நேற்று தடம்புரண்டுள்ளது.

சட்டவிரோதமாக மணல் 15ஆம் பக்கம் பார்க்க

## முல்லைத்தீவு விசுவமடுவில்
# கசிப்பு உற்பத்தி நிலையம் ஊர் மக்களால் முற்றுகை


(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டம் விசுவமடு தொட்டியடி பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்று அவ்வூர் மக்களால் நேற்று முற்றுகையிடப்பட்டது.

தொடர்ச்சியாக அப்பகுதியில் கசிப்பு உற்பத்தி இடம் பெற்று வந்த நிலையில் பலமுறை முறைப்பாடு செய்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. 15ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



பிறப்பு 08 - 09 - 1944

இறப்பு 04 - 03 - 2026

## சுந்தரமூர்த்தி தேவராஜா

(ஓய்வுபெற்ற பொது சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர்)

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறை, பண்டாரவளை, பதுளை, திருகோணமலை மற்றும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரமூர்த்தி தேவராஜா அவர்கள் கடந்த (04.03.2026) புதன்கிழமை அன்று மானிப்பாயில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரமூர்த்தி - இராசம்மா தம்பதியரின் மூத்த புதல்வரும் காலஞ்சென்றவர்களான தனஞ்செயராஜா - புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் பத்மினி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற இராமலிங்கம் மற்றும் ஸ்ரீமணி, வத்சலா, தேவகி, ஜோதிபாலன், துளசி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற தெய்வேந்திரராஜா மற்றும் ஸ்ரீஸ்கந்தராஜா, விக்னராஜா, பத்மராஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும் கணேஷ் (லண்டன்), கல்பனா (பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், பரீட்சைகள், மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்), அபர்ணா(அயர்லாந்து) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நிஷாந்தி(லண்டன்), திருஞானசம்பந்தர், துஷாந்தன்(அயர்லாந்து) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கவின்(லண்டன்), யுவன்(லண்டன்), லக்ஷமன்(லண்டன்), மனோஷன்(இறுதியாண்டு மாணவன் - கால்நடை மருத்துவம் மற்றும் விலங்கியல் விஞ்ஞானபீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்), ஒவியா(அயர்லாந்து), மஞ்சிரா(அயர்லாந்து) ஆகியோரின் ஆசைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.03.2026) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 3.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல. 12, கல்லூரி ஒழுங்கை,
மானிப்பாய்.
(மானிப்பாய் இந்துக் கல்லூரி
மைதான ஒழுங்கை)

071 869 1821 (மனைவி)
077 408 1389 (மருமகன்)
077 532 6474(மகள்)
021 205 4130 - வதிவிடம்

(6984)


# காணி விற்பனைக்கு

## யாழ்ப்பாணம் மானிப்பாய் நகரத்தில் 26 நிலப்பரப்புக் காணி விற்பனைக்கு

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- மானிப்பாய் நகரம் சோதி வேம்படி வித்தியாலயம் அருகு வழி வேம்படி வீதியில்
- யாழ்ப்பாண்ணம் காரைநகர் பிரதான வீதியில் இருந்து 300m தூரத்தில்
- வங்கிகள், பாடசாலைகள், பிரதான வர்த்தக நிலையங்கள் 400m தூரத்துக்குள்
- நல்ல சூழல், நன்னீர் ஊற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை முன் காணித் துண்டு - 3200000/= (முப்பத்திரண்டு இலட்சம்)
- நடுக் காணித் துண்டு - 2800000/= (இருபத்தி எட்டு இலட்சம்)
- பின் காணித் துண்டு 2600000/= (இருத்தி ஆறு இலட்சம்)
- பார்வையிடும் நேரம் - காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை


(6985)

074 029 2338, 076 990 3039, 077 288 0152


# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை திருமதி
பல்லியகுருகே ஆஷா தமயந்தி அவர்களின்
அன்பு மாமனார்

## திரு. கருணாரத்ன வீரசேகர




அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்
வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவுத்துயருடன்...
சேவையாளர் சங்கம்,
யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

(2112)

# மரண அறிவித்தல்

## திரு. நடராஜா சுப்பிரமணியம் (மணி)



பிறப்பு 17.10.1959 இறப்பு 28.02.2026

யாழ். பலாலி கிழக்கைப் பிறப்பிட மாகவும் ஐக்கிய அமெரிக்கா Newyork ஐ வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா சுப்பிரமணியம்(மணி) அவர்கள் கடந்த 28.02.2026 சனிக்கிழமை அன்று கால மானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப் பிள்ளை நடராஜா - ஆச்சிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் யோகராஜா (USA), லோகேஸ்வரன் (அப்பாப்பிள்ளை - UK), பரமேஸ்வரி, சரவணபவானந்தன் (Germany) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் றெஜினா யோகராஜா(USA), சரவணபவானந்தன்(Germany) ஆகி யோரின் பாசமிகு மைத்துனரும் ஜித்தேத்திரா யோகராஜா(USA), கவித்தா சுகந்தன்(UK), நிரோசன் லோகேஸ்வரன் (UK), சாம்பவி லோகேஸ்வரன்(UK), ஸ்கந்தபாலன்(Germany), நவநீத்(UK), ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும் டிலானி ஜித்தேத்திரா(USA), சோபியா ஸ்கந்தபாலன்(Germany), சுதர்ஷினி நவநீத்(UK), துசாலினி சரவணபவானந்தன்(Germany), சுகந்தன்(UK) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஜனுசன்(UK), அர்ஜீன்(UK), பியங்கா(USA), ஒலிவியா(USA) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை 07.03.2026 சனிக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் நண்பகல் 12.00 மணிவரை Thomas F.Dulton Funeral Home(NewHyde Park) Ny-11040 நடைபெற்று தகனக்கிரியைக்காக பி.ப 01.00 மணியளவில் Fresh Pond Crematory 61-40 mount oliver Crescent, middle village Ny 11379 எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பலாலி கிழக்கு,
பலாலி.

யோகராஜா (USA) : 001 718 465 3380
லோகேஸ்வரன் (UK) : 0044 7970 72 7348 - சகோதரர்
பரமேஸ்வரி (Germany) : 0049 201 685 8296 - சகோதரி

(C-5134)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 32 மில்லியன் பெறுமதியான போதைப் பொருட்கள் மீட்பு

தாய்லாந்தில் இருந்து இலங்கைக்கு சட்டவிரோதமாக போதைப் பொருட்களைக் கடத்த முயன்ற இரண்டு இந்தியப் பிரஜைகள் நேற்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் தாய்லாந்தில் இருந்து FD 142 என்ற விமானம் மூலம் வருகை தந்திருந்தனர்.

இவர்களது கைப் பைகளில் இருந்த சுமார் 3 கிலோ கிராம் "குஷ்" கஞ்சா மற்றும் 182 கிராம் ஹஷிஷ் போதைப் பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்ட இருவரும் 26 மற்றும் 37 வயதுடையவர்கள். கைப்பற்றப்பட்ட போதைப்பொருட்களின் சந்தை மதிப்பு சுமார் 32 மில்லியன் ரூபா என மதிப்பிடப் பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளுக்காக சந்தேகநபர்கள் மற்றும் போதைப்பொருள் பொதிகள் பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (நி)


A/L PHYSICS
சாவகச்சேரியில் ...
மாலை, இரவு நேர குழு வகுப்புக்கள்...
2028 - Basic
2027 - Sound
2026/Repeat - Field
T.Jinthujan
BSc Electronics A.T Following
at university of Colombo
T.P : 076 603 4895
No.93, Nunavil Kalvayal
Road, Chavakacheri
(6983)
Physics Domain Institute
365/1, Power house Road, Jaffna.

A/L ICT வகுப்புக்கள்.திரு.இ.குமரன்
A/L 2028
New Batch Starts on 7/3/2026, Saturday at 4 pm
A/L Repeat Batch
100% Practical
A/L 2026
Python Programming
Web development
Paper Class
A/L 2027
Computer Networks
(C-5138)
வடக்கில் ICT பாடத்தில் அதிக A சித்தி பெறும் ஒரே நிறுவனம்
ICT துறையில் 24 வருட கற்பித்தல் அனுபவம்
MIS ICT COLLEGE TP:0776577359, #74, Sabapathy Lane, Jaffna.

# இலங்கை நோக்கி மற்றொரு ஈரானிய யுத்தக்கப்பல்

# தேசிய பாதுகாப்பிற்கு பெரும் அச்சுறுத்தல்!

## எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

**இலங்கை கடற்பரப்பில் கொழும்பு துறைமுகத்திற்கு அருகில் மேலும் ஒரு ஈரானிய கப்பல் உள்ளதாகத் தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் இது தொடர்பில் அரசாங்கத்திடம் இருந்து தெளிவான அறிக்கையொன்று அவசியம் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.**

நேற்று பாராளுமன்றத்தில் விசேட உரையொன்றை ஆற்றிய சஜித் பிரேமதாச, நேற்றைய தினம் அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பலிலிருந்து டொர்பிடோ மூலம் குறித்த கப்பல் மீது தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பிலும் அரசாங்கம் விசேட அறிக்கையொன்றை விடுக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

ஈரானியக் கப்பலில் இருந்தவர்களின் உயிர்களைக் காப்பாற்றிய இலங்கைப் படையினருக்குப் பாராட்டுத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இந்தச் சம்பவம் தொடர்பில் இராஜதந்திர ரீதியாக அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகள் குறித்து இதுவரை தெளிவான அறிவிப்பு எதனையும் வெளியிடவில்லை எனவும் தெரிவித்தார்.

நாட்டின் இறையாண்மை மற்றும் ஆட்புல ஒருமைப்பாடு தொடர்பில் கவனம் செலுத்த வேண்டிய பாரதூரமான நிலைமை ஏற்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் நாட்டுக்கு அருகில் இவ்வாறானதொரு கப்பல் அழிக்கப்பட்டமை தொடர்பில் அரசாங்கம் அறிந்திருந்தும் சபைக்கு அறிவிக்காமை; பாராளுமன்ற உறுப்பினர்களின் அரசியலமைப்பு ரீதியான கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தடையாக அமைந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

மேலும் தற்போது காலி கராப்பிட்டிய வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டுள்ள ஈரானியர்களின் சடலங்களை வைப்பதற்கு வைத்தியர்களால் 40 அடி கொள்கலன் கோரப்பட்டுள்ளதாகவும், இது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தும் என எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித், எமது நாட்டு கடற்பரப்பில் இடம்பெறும் செயற்பாடுகளை அரசாங்கம் அறியாமல் இருப்பது எவ்வாறு தேசிய பாதுகாப்பிற்குப் பிரச்சினையாக அமையாது எனவும் இதன்போது கேள்வியெழுப்பினார். இந்நிலையில் மூழ்கடிக்கப்பட்ட ஈரானின் "ஐரிஸ் டேனா" கப்பலில் இருந்து மீட்கப்பட்ட குழுவினரில் 32 பேர் கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ பாராளுமன்றத்தில் தெரிவித்தார். அவர்களில் ஒருவர் தற்போது அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

மேலும், இதுவரை 87 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டு கரைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் அவர் பாராளுமன்றத்தில் உத்தியோகபூர்வமாக அறிவித்தார். (நி)

## பிரத்தியேக பொருளாதார வலயத்திற்குள் ஈரானியக் கப்பல்

### அரசாங்கம் தீவிர கண்காணிப்பு



(கொழும்பு)

இலங்கையின் பிரத்தியேக பொருளாதார வலயத்திற்குள் மற்றுமொரு ஈரானியக் கப்பல் காணப்படுவதாக ஆளுங்கட்சியின் பிரதம கொறடா அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இந்தக் கப்பல் தொடர்பாக ஜனாதிபதி, பாதுகாப்புச் சபை மற்றும் அரசாங்கம் முழுமையாக அறிந்துள்ளதாக இதன்போது அமைச்சர் உறுதிப்படுத்தியுள்ளார்.

குறித்த கப்பல் இலங்கையின் பிராந்திய கடற்பரப்பிற்குள் இல்லை என்றும், அது பிரத்தியேக பொருளாதார வலயத்திற்குள் இருப்பதாகவும் அவர் விளக்கமளித்தார்.

கப்பலில் உள்ளவர்களின் உயிர்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் அரசாங்கம் அதிகபட்ச தலையீட்டை மேற்கொண்டு வருகின்றதோடு பிராந்திய பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், உயிராபத்துகளைத் தவிர்க்கவும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இது தொடர்பான முழுமையான அறிக்கை விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (நி)

## நெல் கொள்வனவிற்காக 10,000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

### நெல்லுக்கான கொள்வனவு விலைகளும் அதிகரிப்பு

(கொழும்பு)

அரசாங்கம் இம்முறை நெல் கொள்வனவுக்காக 10,000 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளதுடன் நெல்லுக்கான கொள்வனவு விலைகளையும் அதிகரித்துள்ளதாக பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.



பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை சுசந்த குமார நவரத்ன எம்.பி எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்.

நாடு நெல் 120 ரூபா, சம்பா நெல் 130 ரூபா, கீரி சம்பா நெல் 140 ரூபா என்ற அடிப்படையிலேயே அரசாங்கத்தினால் நெல் கொள்வனவு முன்னெடுக்கப்படுகிறது.

நெல் கொள்வனவுகளை மேற்கொள்வதற்காக அரசாங்கத்தின் அனைத்து நெற்களஞ்சிய சாலைகளும் திறக்கப்பட்டுள்ளன. அத்துடன் நெல்லுக்கு உத்தரவாத விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

தர நிர்ணயத்துடன் உற்பத்தி செய்யப்பட்டுள்ள நெல்லை விவசாயிகள் நெல் சந்தைப்படுத்தும் சபையின் களஞ்சிய சாலைகளுக்குப் பெற்றுக் கொடுக்க முடியும். அதற்கான அனைத்து வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

நெல் கொள்வனவு நடவடிக்கைகளுக்காக அரசாங்கம் பத்தாயிரம் மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளது. அதே நேரம் சம்பா மற்றும் கீரி சம்பா ஆகியவற்றின் விலைகளை உயர்த்துவதற்கும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

50,000 மெற்றிக் தொன் நெல்லை களஞ்சியப்படுத்தும் வகையில் களஞ்சியசாலைகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. அதனால் நெல் கொள்வனவு மேலும் அதிகரிக்கும் போது அதனைக் கருத்திற்கொண்டு அதற்கான நிதியையும் அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார். (நி)

## கட்டாரிலுள்ள இலங்கையர்களை தூதரகத்தில் பதிவு செய்யுமாறு கோரிக்கை

(கொழும்பு)

கட்டாரில் வசிக்கும் அனைத்து இலங்கை பிரஜைகளையும் தங்களைப் பற்றிய விபரங்களைத் தூதரகத்தில் பதிவு செய்யுமாறு கட்டாரிலுள்ள இலங்கைத் தூதரகம் அவசர கோரிக்கை விடுத்துள்ளது.

இதற்காக வழங்கப்பட்டுள்ள "கூகுள் படிவத்தை" பூர்த்தி செய்வதன் மூலம் இலங்கையர்கள் தங்களைப் பதிவு செய்து கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அவசர காலங்களில் தொடர்புகளைப் பேணுவதற்கும், ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்கும், மக்கள் நலன் சார்ந்த விடயங்களை முன்னெடுப்பதற்குமே இந்தத் தரவு சேகரிப்பு நடத்தப்படுகிறது.

கோரப்பட்டுள்ள அனைத்து விபரங்களையும் மிகத் துல்லியமாக உள்ளீடு செய்து, அந்தப் படிவத்தை மிக விரைவில் சமர்ப்பிக்குமாறு தூதரகம் கேட்டுக் கொண்டுள்ளது.

தற்போதைய பிராந்திய பாதுகாப்புச் சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு, கட்டாரில் தங்கியுள்ள இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த இவ்வாறான பதிவுகள் மிகவும் அவசியம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 208 பேரைக்...

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று இரவு இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் கடற்பரப்புக்கு அருகில் இருக்கும் ஈரானிய கடற்படைக் கப்பல் IRIS Bushehr- இல் உள்ள பணியாளர்கள் கொழும்பு துறைமுகத்தில் இறக்கப்படுவார்கள்.

அதனைத் தொடர்ந்து, அந்தக் கப்பல் திருகோணமலை துறைமுகத்திற்கு கொண்டு செல்லப்படும் என்றும், கப்பலில் உள்ள 208 பேரையும் பாதுகாப்பாக கொழும்பு துறைமுகத்திற்கு கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளை இலங்கை கடற்படையினர் செய்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அணிசேரா கொள்கையை இறுக்கமாக கடைபிடிக்கும் அதேநேரம், மனிதாபிமான ரீதியான முன்னெடுப்புகளையும் இலங்கை மேற்கொள்ளும்.

எந்த ஒருநாடும், இலங்கையின் இறைமைக்கு உட்பட்ட பிரதேசத்தை தமது நலனுக்காக பயன்படுத்த அனுமதிக்கப்படமாட்டாது.

மத்திய கிழக்கு நாடுகளில் அமைதியற்ற நிலை தோற்றம் பெற்றுள்ள நிலையில் இலங்கை நடுநிலையான கொள்கையை பின்பற்றும். இலங்கையின் கடற்பரப்பில் தஞ்சமடைபவர்களின் உயிரைப் பாதுகாக்க வேண்டிய கடப்பாடு இலங்கைக்கு உண்டு என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை கடற்பரப்புக்கு அருகில் ஈரானியக் கப்பல் ஒன்று நேற்று நங்கூரமிட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## இறுதிப் போட்டிக்கு...

ஐ.சி.சி ரி-20 உலகக் கிண்ணத் தொடரின் இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் இங்கிலாந்து அணியை 7 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி இந்திய அணி இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.


இதற்கமைய முதலில் களமிறங்கிய இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்களை இழந்து 253 ஓட்டங்களைக் குவித்தது.

அதனடிப்படையில் 254 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகளை இழந்து 246 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது.

அதனடிப்படையில் இந்த வெற்றியின் மூலம், 2026 ரி-20 உலகக் கிண்ண இறுதிப் போட்டிக்கு இரண்டாவது அணியாக இந்தியா தெரிவாகியுள்ளது.

அந்த வகையில் இந்தியா அணி எதிர்வரும் 8 ஆம் திகதி நடைபெறவுள்ள இறுதிப்போட்டியில் நியூசிலாந்து அணியை எதிர்கொள்ளவுள்ளது. (ம-7)

# மரண அறிவித்தல்



பிறப்பு 06 - 05 - 1951

இறப்பு 05 - 03 - 2026

## விசுவலிங்கம் இராசலிங்கம் (பெரியதம்பி)

மண்டைதீவு எட்டாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் சோளாவத்த, வேலணையை வசிப்பிடமாகவும் கொண்ட விசுவலிங்கம் இராசலிங்கம் (பெரியதம்பி) அவர்கள் நேற்று (05.03.2026) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விசுவலிங்கம் - அன்னம்மா தம்பதிகளின் மகனும் காலஞ்சென்ற நடராஜா - நாகம்மா தம்பதிகளின் மருமகனும் சரோஜினிதேவி(சுந்தரி) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான நடனசுந்தரம், கனகசுந்தரம், யோகாம்பிகை மற்றும் பாலசுந்தரம், சோமசுந்தரம், பஞ்சலிங்கம், அமிர்தலிங்கம்(சின்னத்தம்பி) ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்றவர்களான பராசக்தி, கலைவாணி மற்றும் நாகேஸ்வரி(அன்னலட்சுமி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.03.2026) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.00 மணியளவில் சோளாவத்த வீரம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சோளாவத்த,
வேலணை.

(C-5139)

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



மலர்வு 09.09.1945

உதிர்வு 05.03.2026

## கதிரேசு பத்மநாதன் (வெற்றி)

### (ஓய்வுபெற்ற ஆசிரியர் – சென் பற்றிக்ஸ் கல்லூரி)

உடுவிலைப் பிறப்பிடமாகவும் கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரேசு பத்மநாதன் அவர்கள் நேற்று (05.03.2026) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரேசு - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வைரமுத்து - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் ஜெயநாயகி அவர்களின் அன்புக் கணவரும் நவரத்தினம், செல்வரத்தினம், காலஞ்சென்றவர்களான கனகநாயகம், ஈஸ்வரி, செல்வராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் குமணன், வானதி (யாழ்.கல்வித் திணைக்களம்), ஆரணி, காலஞ்சென்ற ஆதவன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயரஞ்சன், பிரணவன் ஆகியோரின் மாமனாரும் ஜாத்விகா, கவினாஷ், ஹர்ஷினி, அகரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.03.2026) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

220, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

(C-5133)


தகவல் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுற்றுச்சூழல் அமைச்சர் கலாநிதி தம்மிக்க படபெந்தி நீர்வேலியில் உள்ள கிறீன் லேயர் அமைப்பின் அலுவலகத்திற்கு கடந்த 2ஆம் திகதி திங்கட்கிழமை விஜயம் மேற்கொண்டார். அங்கு கிறீன் லேயர் அமைப்பின் முயற்சிகள் அனைத்தையும் பார்வையிட்டு நிர்வாகத்தினருக்கு ஊக்கமளித்தார்.

# அரச சேவைகளில் 15,839 வெற்றிடங்கள் ஆட்சேர்ப்புக்களுக்கு அமைச்சரவை அனுமதி



(கொழும்பு)

இலங்கையின் அரச சேவையில் நிலவும் 15,839 புதிய ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்கு அமைச்சரவை உத்தியோகபூர்வமாக அனுமதி வழங்கியுள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் அமைச்சுக்கள் மற்றும் மாகாண சபைகளில் நீண்டகாலமாக நிலவி வரும் வெற்றிடங்களை நிரப்பும் நோக்கில் இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பிரதமரின் செயலாளரின் தலைமையில் நியமிக்கப்பட்ட விசேட குழுவின் பரிந்துரைகளுக்கு அமைவாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

2024 டிசம்பர் 30 அன்று அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட இந்தக் குழு, பொதுச் சேவையின் அத்தியாவசியத் தேவைகள் மற்றும் முன்னுரிமைகளை ஆய்வு செய்து இந்த அறிக்கையைச் சமர்ப்பித்திருந்தது.

அதிகபடியான ஆட்சேர்ப்புக்கள் பாதுகாப்பு மற்றும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சுக்களில் இடம்பெறவுள்ளதாகவும் முக்கிய அமைச்சுக்களின் விபரங்கள் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சில் 9,794 வெற்றிடங்களும், பொதுப் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சில் 1,915 வெற்றிடங்களும், சுகாதார மற்றும் ஊடக அமைச்சில் 776 வெற்றிடங்களும், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சில் 339 வெற்றிடங்களும் காணப்படுகின்றன.

அத்துடன் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சில் 300 வெற்றிடங்களும், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் அபிவிருத்தி அமைச்சில் 214 வெற்றிடங்களும், நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சில் 67 வெற்றிடங்களும் நிலவுகின்றன.

மேலும் மாகாண சபைகளிலும் கணிசமான அளவில் வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ள நிலையில் மாகாண சபைகளுக்கான ஒதுக்கீடு இவ்வாறு அமைந்துள்ளது.

வடமாகாண சபையில் 411 வெற்றிடங்களும், வடமேல் மாகாண சபையில் 401 வெற்றிடங்களும், கிழக்கு மாகாண சபையில் 282 வெற்றிடங்களும், சப்ரகமுவ மாகாண சபையில் 236 வெற்றிடங்களும், ஊவா மாகாண சபையில் 146 வெற்றிடங்களும் நிரப்பப்படவுள்ளன.

இந்தப் பாரிய ஆட்சேர்ப்பு நடவடிக்கையானது பொதுச் சேவையின் வினைத்திறனை அதிகரிப்பதுடன், அரச நிர்வாகக் கட்டமைப்பை மேலும் வலுப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)



தம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலை விளையாட்டுப் போட்டி, பாடசாலை அதிபர் இ.குகன் தலைமையில் இளம்பிறை மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது. **படம்-மகாலிங்கம்**



தெல்லிப்பழை பொது நூலகம் நடத்திய தேசிய வாசிப்பு மாதத்திற்கான பரிசில் வழங்கல் நிகழ்வு பன்னாலை வரத்தலம் கற்பக விநாயகர் ஆலய மண்டபத்தில் கடந்த 25ஆம் திகதி நடைபெற்றது.
**படம்-சிவசாந்தன்**

## மசகு எண்ணெய், எரிவாயு விலை மீண்டும் உயர்வு



(கொழும்பு)

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவி வரும் தீவிர போர்ப் பதற்றங்களுக்கு மத்தியில், உலகளாவிய எரிசக்திச் சந்தையில் மசகு எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுவின் விலை நேற்று மேலும் உயர்வைச் சந்தித்துள்ளது.

உலகளாவிய எரிசக்தி சந்தை நிலவரப்படி, WTI ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 77.86 அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது.

அதேவேளை, சர்வதேச ரீதியில் அதிகம் பயன்படுத்தப்படும் பிரெண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 84.59 அமெரிக்க டொலராக நிலவுகிறது. இதேவேளை, இயற்கை எரிவாயுவின் விலையிலும் நேற்று மாற்றம் ஏற்பட்டுள்ளது. அதன்படி, அதன் விலை 3.003 அமெரிக்க டொலராக அதிகரிப்பை பதிவுசெய்துள்ளது. (நி)





இன்னும் 30 வருடங்களில்?

எதிர்காலத்தை பயமில்லாமல் எதிர் கொள்ளுங்கள்
CEYLINCO LIFE உடன் ஓய்வுக்காலத்தை திட்டமிடுங்கள்
இன்றே அழையுங்கள் 0112 461 461

CEYLINCO LIFE®
வாழ்க்கைக்கான நிரந்தர உறவு™

*2025 ஜனவரி மாத பொதுவான சந்தை விலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதியவர்களுக்கான மருத்துவ முகாம்

(வேலணை)

வேலணை பிரதேச செயலகமும் Help Age நிறுவனமும் இணைந்து நடத்தும் முதியவர்களுக்கான மருத்துவ முகாம் புங்குடுதீவு அம்பலவாணர் அரங்க வளாகத்தில் இன்று காலை 8 மணி முதல் மதியம் 1 மணி வரை நடைபெறவுள்ளது.

இவ் மருத்துவ முகாமினூடாக கண்பரிசோதனைகள் செய்து பொருத்தமான மூக்கு கண்ணாடிகள் வழங்கப்படுவதுடன் முதியவர்களுக்கான மருத்துவ பரிசோதனைகளும் நடைபெறவுள்ளது.

எனவே புங்குடுதீவு பிரதேசத்தின் அனைத்து கிராம அலுவலர் பிரிவுகளில் இருந்தும் வேலணையின் J/14 மற்றும் J/19 கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த 55 வயதிற்கு மேற்பட்ட முதியவர்களையும் கலந்து பயன்பெற்றுக் கொள்ளுமாறு வேலணை பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (8)

## கிளிநொச்சி

# இறங்குதுறையை புனரமைத்துத் தருமாறு கடற்றொழிலாளர்கள் கோரிக்கை



(கண்டாவளை)

கிளிநொச்சி, அன்புபுரம் பகுதியில் தமக்கான இறங்குதுறை இன்மையால் பெரும் சிரமங்களை எதிர்க்கொள்வதாக கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அன்புபுரம் கிராமத்தில் 110 இற்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர்கள் கடற்றொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

அத்துடன் குறித்த பகுதியில் 70 இற்கும் மேற்பட்ட மீன்பிடி படகுகள் மற்றும் வெளியிணைப்பு இயந்திரங்கள் காணப்படுகின்றன.

இவற்றை கடற்றொழிலுக்கு கொண்டு செல்வதற்கும் தொழில் முடிந்து மீள திரும்புவதற்கும் ஏற்ற வகையில் உரிய இறங்குதுறை வசதிகள் இன்மையால் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவித்துள்ளனர்.

கடந்த 16 ஆண்டுகளுக்கு மேலாக குறித்த பகுதியில் உள்ள துறையை ஆழப்படுத்தி புனரமைத்து தருமாறு கோரிக்கை விடுத்தும் இது வரை புனரமைக்கப்படவில்லை.

இவ்வாறு இறங்குதுறை புனரமைக்கப்படாமையினால் நாளாந்தம் கடற்றொழிலுக்கு சென்று வருவதில் தாம் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் அனர்த்தங்களின் போது படகுகள் மற்றும் இயந்திரங்களை பாதுகாக்க முடியாமல் உள்ளதாகவும் தெரிவித்தனர்.

எனவே எதிர்காலத்தில் குறித்த பகுதியில் உள்ள இறங்குதுறையை ஆழப்படுத்தி புனரமைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (8-315)

## சந்நிதியான் ஆச்சிரமத்தால் உதவிகள்

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் திருகோணமலை ஈச்சிலம் பற்று பிரதேச செயலக பிரிவின் வெருகல் பிரதேசத்தில் அமைந்துள்ள அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு 85 ஆயிரம் ரூபா செலவில் சீருடைத் துணிகள் வழங்கப்பட்டன.

அத்துடன் அம்பாறை பொத்துவில் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு 42 ஆயிரம் ரூபா செலவில் சீருடைத்துணிகளும் அம்பாறை திருக்கோவில் பிரதேச செயலக பிரிவில் உள்ள மாணவர்களுக்கு 3 இலட்சம் ரூபா நிதியில் துவிச்சக்கர வண்டிகளும் வழங்கப்பட்டன. (8-60)

## தென்னங்கன்றுகள் வழங்கல்



(சாவகச்சேரி)

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் ஊடாக கடந்த செவ்வாய்க்கிழமை தென்னை பயிர் செய்கை சபையால் மூவாயிரம் தென்னங்கன்றுகள் தென்மராட்சி கலைமன்றத்தில் வைத்து பொதுமக்களுக்கு வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

நிகழ்வில் தென்மராட்சிப் பிரதேசசெயலர் சத்தியசோதி, லயன்ஸ் கழக மாவட்ட ஆளுநர் பத்மநாதன், உபமாவட்ட ஆளுநர் உதயசூரியன், வட மாகாண தென்னை பயிர் செய்கை சபையின் பிராந்திய முகாமையாளர் ரி.வைகுந்தன் மற்றும் லயன்ஸ் கழக உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (8-30)

## ஏலவிற்பனை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்ற வளாகத்தில் வெவ்வேறு அளவுகளுடைய கைத்தொலைபேசிகள், இரும்பு பொருட்கள் என்பன நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன. குறித்த பகிரங்க ஏலத்தில் கொள்வனவு செய்பவர்கள் கொடுப்பனவுகளை பணமாகவே செலுத்தபட வேண்டும் என்பதுடன் காசோலை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

மேலும் ஏலத்தில் கொள்வனவு செய்ய வருபவர்கள் தமது தேசிய அடையாள அட்டையுடன் சமூகமளிக்க வேண்டும்.

அத்துடன் ஏலவிற்பனையில் பெற்றுக் கொள்ளும் பொருட்களை உடனடியாக வளாகத்தில் இருந்து அகற்றப்படுதல் வேண்டும் என நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (8)

## வலிகாமம் மேற்கில் 'லஞ்சீற்' பாவனைக்குத் தடை

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்கு பிரதேசசபை எல்லைக்குட்பட்ட உணவு கையாளும் நிறுவனங்களில் எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் லஞ்சீற் பாவனைக்கு முற்றாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மக்களின் ஆரோக்கியத்தை கருத்தில் கொண்டு குறித்த நிறுவனங்கள் தமது சமூக அக்கறையை வெளிப்படுத்தி மேற்படி திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு வலிகாமம் மேற்கு பிரதேச சபை தவிசாளர் அறிவித்துள்ளார். (8)

## 'கனலி' இதழ் வெளியீடும் குறுந்திரைப்பட விழாவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறை மாணவர்களால் தயாரிக்கப்பட்ட சஞ்சிகை "கனலி" - இதழ் 6 வெளியீடும், குறுந்திரைப்பட விழாவும் இன்று வெள்ளிக் கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளன.

யாழ். பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறையின் தலைவர் பூங்குழலி சிறிசங்கீர்த்தனன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர். சி. சிறிசற்குணராசாவும், சிறப்பு விருந்தினர்களாக கலைப்பீடத்தின் பதில் பீடாதிபதி கலாநிதி கி.சண்முகநாதனும் ஊடகத்துறைப் பேராசிரியர் சி.ரகுராமும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

சஞ்சிகைக்கான கருத்துரையினை கல்வியியல் துறை விரிவுரையாளர் இ.சர்வேஸ்வரா நிகழ்த்தவுள்ளார். அதனைத் தொடர்ந்து மாணவர்களால் இயக்கப்பட்ட குறும்படங்களின் திரையிடல் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-33)

## தவிசாளர் நிரோஸின் கடமைக்கு இடையூறு; சந்தேக நபருக்கு 14 நாட்கள் விளக்க மறியல்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஸின் கடமைக்கு இடையூறு விளைவித்த வழக்கில் சந்தேகநபருக்கு 14 நாட்கள் விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கட்டப்பிராயில் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் அனுமதியற்ற சட்டவிரோத கட்டடம் ஒன்றை இடித்து அழிக்கும் செயற்பாட்டில் கடமையில் ஈடுபட்டிருந்த வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஸை வேறு பிரதேசத்தில் இருந்து அவ்விடத்திற்கு வருகை தந்த ஒருவர் தான் கூட்டிவந்த சகாவிடம் தொலைபேசியை வழங்கி தான் தவிசாளருடன் பாதை பிரச்சினை ஒன்று தொடர்பாக முரண்படவுள்ளமையினை வீடியோ பதிவு செய்யமாறு தெரிவித்துவிட்டு தவிசாளரை நோக்கி அவதூறுப்படுத்தியதுடன் கடமைக்கு இடையூறுப்படுத்தினார்.

அவ்விடத்தில் தவிசாளர் தங்களுக்கு ஏதாவது பிரச்சினைகள் இருப்பின் தம்மை அலுவலகத்தில் முறைப்படி அணுகுமாறு தெரிவித்துவிட்டு கடமையில் நின்றார். இந்நிலையில் பொதுமக்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் முன்னிலையில் தவிசாளரை மரியாதைக்குறைவாக எச்சரித்திருந்ததுடன் கடமைக்கு இடையூறாக செயற்பட்ட நிலையில் கைது செய்யப்பட்டார்.

தொடர்ந்து தனது கடமைக்கு இடையூறு விளைவிக்கப்பட்டதாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் அந் நபருக்கு எதிராக தவிசாளர் வாக்குமூலமளித்திருந்தார்.

இந் நிலையில் தவிசாளரின் கடமைக்கு இடையூறு விளைவித்தமைக்காகக் கைதுசெய்யப்பட்டவரை கடந்த செவ்வாய்க்கிழமை மேலதிக நீதவான் நீதிமன்றில் கோப்பாய் பொலிஸார் முற்படுத்தியதுடன் அறிக்கை தாக்கல் செய்தனர்.

இந்நிலையில் எதிராளிக்கு யாழ்ப்பாணம் மேலதிக நீதிமன்று எதிர்வரும் 14 நாட்களுக்கு விளக்கமறியல் உத்தரவிட்டது. தவிசாளர் சார்பாக சட்டத்தரணி மோகனேஸ்வரன் ரமணனும் சந்தேகநபர் சார்பாக சட்டத்தரணிகளான லக்சன் செல்வராஜா மற்றும் லவகாந் ஆகியோர் மன்றில் முன்னிலையாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8)



ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைதாகி முப்பது வருடங்களுக்கு மேலாக சிறைவாசம் அனுபவித்து சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டு உயிரிழந்த சாந்தனின் இரண்டாம் ஆண்டு நினைவேந்தல் அவரது சமாதி அமைந்துள்ள வடமராட்சி எள்ளங்குளத்தில் அண்மையில் இடம்பெற்றது. (படம்- மகாலிங்கம்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 18ஆம் ஆண்டு நீங்கா நினைவுகளுடன்...




தாயின் மடியில் 21 . 01 . 1957

தாயக மண்ணில் 06 . 03 . 2008

## மாமனிதர்.கிட்டினன் சிவநேசன்

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் (தமிழ் தேசிய கூட்டமைப்பு)பொது முகாமையாளர்
(வட மாகாண பனை தென்னை வள கூட்டுறவு நிறுவனங்களின் பேரிணயம்)

எம் நினைவில் நீங்கள் என்றும்
ஆண்டுகள் பல ஆனபோதும் அழியாத வடுக்களாய்– அப்பா
எம் அன்பின் வடிவம் ஆளுமையின் சிகரம்
மக்கள் உரிமைக்காய் உலகெலாம் ஒலித்த குரல்– இன்று
மௌனித்து பதினெட்டு ஆண்டுகள் ஆயினவே...



அன்னாருடன் சாவடைந்த சாரதி
அமரர்.
**பெரியண்ணன் மகேஸ்வரராசா**
அவர்களையும் நினைவு கொள்கின்றோம்.

(C-5130)

குடும்பத்தினர்
மாமனிதர் சிவநேசன் அறக்கட்டளை நிதியம்
யாழ்ப்பாணம்.

## வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர்
## பகிரங்க ஏல விற்பனை அறிவித்தல்

வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் பாவனையில் இருந்து நீக்கப்பட்ட கணினி உதிரிப்பாகங்கள், தளபாடங்கள், வாகன ரயர்கள்,வாகன பற்றறிகள், வாகன உதிரிப்பாகங்கள், மின்விசிறிகள் மற்றும் ஏனைய பொருட்கள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட உள்ளன.

**காலம் :- 20.03.2026 வெள்ளிக்கிழமை மு.ப 11.00 மணி**
**இடம் :- தலைமை அலுவலகம், புத்தூர்.**

**நிபந்தனைகள்**

1. ஆர்வமுள்ள ஏலதாரர்கள் மீளளிக்கக்கூடிய வைப்புப் பணமாக ரூபா 2000.00 இனையும் மீளளிக்க முடியாத படிவக்கட்டணமாக ரூபா 500.00 இனையும் செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ளல் வேண்டும். உரிய கட்டணங்கள் செலுத்தாதோர் ஏலவிற்பனையில் பங்குபற்ற முடியாது.
2. விண்ணப்பப்படிவம் 2026.03.20 ஆம் திகதி மு.ப 8.30 மணி தொடக்கம் மு.ப 10.30 மணி வரையே வழங்கப்படும். அதன் பின்னர் எக்காரணம் கொண்டும் விண்ணப்பப்படிவம் வழங்கப்படமாட்டாது.
3. சித்தியடைந்த ஏலதாரர் அன்றைய தினமே தங்களால் கோரப்பட்ட ஏலத்தொகையின் முழுத் தொகையையும் செலுத்தி பொருட்களை அலுவலகத்திலிருந்து அகற்றுதல் வேண்டும்.
4. விற்பனை செய்யப்படவுள்ள பொருட்களினையும் அதன் விபரத்தினையும் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.
5. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.அல்லது 021-205 8986 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டும் பெற்றுக்கொள்ளலாம்.

(C-5128)

**தவிசாளர்,**
**வலிகாமம் கிழக்கு பிரதேசசபை,**
**புத்தூர்.**
**06.03.2026**

**தொடர்பு இலக்கம்**
**021 205 8986**

## சிவபூமி பாடசாலை மாணவர்களின்
## மாபெரும் கல்விக் கண்காட்சி

**காலம் : 06.03.2026, 07.03.2026, 08.03.2026**
**இடம் : கோண்டாவில் சிவபூமி பாடசாலை**
**நேரம் : 8.30 A.M - 6.00 PM**

அனைவரும் வருகை தந்து, மாணவர்களின் திறமைகளுக்கு
ஆக்கமும் ஊக்கமும் அளிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நுழைவுச் சீட்டு : 50/=

(C-5125)

சிவபூமி பாடசாலை
கோண்டாவில்.

# நோன்புப் பெருநாளுக்கு விசேட பொது விடுமுறை

## வழங்குமாறு இம்ரான் மகரூப் எம்.பி கோரிக்கை



(கொழும்பு)

நோன்புப் பெரு நாளை முன்னிட்டு மார்ச் மாதம் 20ஆம் திகதி வெள்ளிக் கிழமையை விசேட பொது விடுமுறை தினமாகப் பிரகடனப் படுத்துமாறு பாராளு மன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவிடம் கோரி க்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதிக்கு அவர் அனு ப்பி வைத்துள்ள கடிதத்தில் இதைக் குறிப்பிட்டுள்ளார். அக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப் பட்ட முக்கிய விடயங்கள் வரு மாறு,

நடைமுறை ஆண்டுக் கான நாட்காட்டியின் பிர காரம், நோன்புப் பெருநாள் மார்ச் மாதம் 21ஆம் திகதி சனிக்கிழமை அனுஷ்டிக் கப்படும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. இருப்பினும், இஸ்லாமிய மார்க்க முறைப் படி பெருநாள் தினமானது பிறை தெரிவதைப் பொறுத்தே தீர்மானிக்கப்படுகின்றது.

இலங்கை பிறைக் குழு வின் தீர்மானம் சில நேரங் களில் இரவு வேளையிலேயே அறிவிக்கப்படுகின்றது. இதன் காரணமாக, நாட் காட்டியில் உள்ளபடி சனிக் கிழமைக்கு பதிலாக, மார்ச் 20 ஆம் திகதி வெள்ளிக் கிழமையே பெருநாள் கொண்டாடப்படுவதற்கான அதிக வாய்ப்புகள் காண ப்படுகின்றன.

இவ்வாறான திடீர் மாற்றங்கள் ஏற்படும்போது, சனிக்கிழமை விடுமுறை தினமாக இருந்தாலும், வெள்ளிக்கிழமை அலுவல கங்கள் திறந்திருக்கும்.

இதனால் முஸ்லிம் அர சாங்க ஊழியர்கள் பெரு நாள் தொழுகையில் கலந்து கொள்வதிலும், குடும்பத்தி னருடன் நேரத்தைச் செல விடுவதிலும் பாரிய இக் கட்டான நிலையை எதிர் கொள்வார்கள்.

# பச்சிலைப்பள்ளி பிரதேசசபை - பளை
## இயக்கச்சி சந்தைத்தொகுதி கடை PS-09 இற்கான பகிரங்க ஏல அறிவித்தல்

எமது சபையின் ஆளுகைக்குட்பட்ட இயக்கச்சி சந்தைத் தொகுதியின் கடை PS-09 இனை 23.03.2026 ஆம் திகதி தொடக்கம் 31.12.2026 ஆம் திகதி வரை குத்தகைக்கு விடுவதற்கான பகிரங்க ஏலம் கோரப்பட்டுள்ளது.

**பகிரங்க ஏலம் இடம்பெறும் காலம் :- 20.03.2026**

**பகிரங்க ஏலம் இடம்பெறும் இடம் :- பச்சிலைப்பள்ளி பிரதேசசபை தலைமையலுவலகம், பளை.**

இயக்கச்சி சந்தைத்தொகுதி கடைக்கான கேள்வி அட்டவணை.

| இல | கடை இலக்கம் | ஆகக்குறைந்த ஏலக்கேள்வித் தொகை | ஏலக்கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கப்பட கூடியது) |
|---|---|---|---|
| 1. | PS - 09 | 34,800.00 | 5,000.00 |

**நிபந்தனைகள் :-**

01. ஏலத்தில் பங்குபற்ற விரும்புவர்கள் 06.03.2026 ஆம் திகதி தொடக்கம் 19.03.2026 ஆம் திகதி பி.ப 2 மணிவரையான காலப்பகுதியில் பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் தலைமையலுவலகத்தில் செலுத்திப் பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ளலாம்.
02. ஏற்கனவே பச்சிலைப்பள்ளி பிரதேசசபையினால் கறுப்புப்பட்டியலில் சேர்க்கப்பட்ட கேள்விதாரர்கள் ஏலத்தில் பங்குகொள்ளமுடியாது.
03. ஏலக்கேள்வியில் தெரிவுசெய்யப்பட்ட சித்திகர கேள்விதாரர் உடனடியாக ஏலக்கேள்வித் தொகையின் 1/3 பங்கு பாதுகாப்பு வைப்புப்பணத்தினை செலுத்தி ஒப்பந்தம் செய்யவேண்டும். பாதுகாப்பு வைப்புப்பணத்தை உடனடியாக செலுத்தத்தவறும் பட்சத்தில் அடுத்த கேள்விதாரருக்கு குத்தகைக்கு வழங்கப்படும்.

**திரு.சுப்பிரமணியம் சுரேன்**
**தவிசாளர்,**
**பச்சிலைப்பள்ளி பிரதேசசபை,**

06.03.2026.


(C-5129)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## யுனெஸ்கோ பாரம்பரியச் சின்னம் மீது ஏவுகணைத் தாக்குதல்

### ஈரான் கடும் கண்டனம்



(டெஹ்ரான்)

ஈரான் தலைநகர் டெஹ்ரானில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க கொலெஸ்தான் அரண்மனை மீது நடத்தப்பட்ட ஏவுகணைத் தாக்குதலை "பகிரங்கமான போர்க் குற்றம்" என்று ஈரான் கடுமையாகச் சாடியுள்ளது.

இந்தத் தாக்குதலுக்கு அமெரிக்காவும் இஸ்ரேலுமே காரணம் என்று ஈரான் வெளிவிவகார அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் இஸ்மாயில் பாகேய் குற்றம்சாட்டியுள்ளார்.

இது ஈரானின் கலாசார பாரம்பரியத்தை அழிக்கும் நோக்கில் செய்யப்பட்ட ஒரு "கொடிய குற்றம்" என்று தனது எக்ஸ் தளத்தில் அவர் பதிவிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் யுனெஸ்கோ அமைப்பால் உலகப் பாரம்பரியச் சின்னமாக அங்கீகரிக்கப்பட்ட கொலெஸ்தான் அரண்மனை வளாகத்தின் ஒரு பகுதி திங்கட்கிழமை நடந்த இந்தத் தாக்குதலில் சேதமடைந்துள்ளது.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கலாசார இடங்கள் தாக்குதலுக்கு உள்ளாவது குறித்து யுனெஸ்கோ அமைப்பு தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துள்ளதுடன், இத்தகைய இடங்களைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளது.

இது வெறும் இராணுவத் தாக்குதல் மட்டுமல்ல, ஒரு நாட்டின் அடையாளத்தை அழிக்கும் முயற்சி என ஈரான் தரப்பு வாதிடுகிறது. (3)

# அணு ஆயுத திறனை

## முறையான போர்நிறு

### அவுஸ்திரேலிய, கனேடி

(டெஹ்ரான்)

**ஈரான் அணு ஆயுதங்களை உருவாக்கும் திறனை இழக்கும் வரை போர் நிறுத்தம் சாத்தியமில்லை என அவுஸ்திரேலிய மற்றும் கனேடிய பிரதமர்கள் கூட்டாகத் தெரிவித்துள்ளனர்.**

மத்திய கிழக்கில் போர் தீவிரமடைந்து வரும் நிலையில், அவுஸ்திரேலியப் பிரதமர் அந்தோனி அல்பானிஸ் மற்றும் கனேடியப் பிரதமர் மார்க் கார்னி ஆகியோர் கன்பெராவில் கூட்டாகச் செய்தியாளர்களைச் சந்தித்தனர்.

ஈரான் அணு ஆயுதங்களை உருவாக்கும் திறனை முழுமையாக இழக்கும் வரை முறையான போர்நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்த முடியாது என இரு தலைவர்களும் வலியுறுத்தினர். "தற்போது போர் பரவி வருவதை நாம் காண்கிறோம்.

பொதுமக்கள் மற்றும் பொதுக் கட்டமைப்புகள் மீதான தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டும். இவை போர் நிறுத்தத்திற்கு அவசியமான நிபந்தனைகளாகும்," என கனேடியப் பிரதமர் மார்க் கார்னி தெரிவித்தார்.

ஈரானின் இராணுவ இலக்குகள் மீது சனிக்கிழமை முதல் அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதல்களுக்கு இரு நாடுகளும் தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளன.

ஈரானுக்கு எதிரான தாக்குதலில் கனடா நேரடியாகப் பங்கேற்குமா எனக் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளித்த பிரதமர் மார்க் கார்னி, "தாக்குதலில் பங்கேற்பதை என்னால் ஒருபோதும் திட்டவட்ட

## ஈரானின் ஆட்சி அதிகாரம் புரட்சிகர காவல்படை வசம்

### போர்ச் சூழலில் அதிரடி தீர்மானம்



(டெஹ்ரான்)

ஈரானில் நிலவி வரும் தீவிர போர்ப் பதற்றங்களுக்கு மத்தியில், அந்நாட்டின் இராணுவ மற்றும் நிர்வாக முடிவுகளை எடுக்கும் முழு அதிகாரத்தையும் ஈரானிய புரட்சிகர காவல்படை தனது கைகளில் எடுத்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வழக்கமாக ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனியின் வழிகாட்டுதலில் இயங்கும் இந்த அமைப்பு, தற்போது நிலவும் அசாதாரண சூழலால் "போர்க் காலத் தலைமை" பொறுப்பை ஏற்றுள்ளது.

இந்த அதிரடி மாற்றத்தின் மூலம், ஈரானின் வெளியுறவுக் கொள்கை மற்றும் இராணுவ பதிலடி நடவடிக்கைகள் இனி மிகவும் தீவிரமாகவும், சமரசமற்ற முறையிலும் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

குறிப்பாக, அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் உடனான மோதல்களில் மென்மையான போக்கைக் கடைபிடிக்காமல், நேரடி மற்றும் கடுமையான தாக்குதல்களை முன்னெடுக்கும் அதிகாரத்தை இந்தப் படை பெற்றுள்ளது.


இந்த அதிகார மாற்றம், ஈரானின் அரசியல் கட்டமைப்பில் இராணுவத்தின் பிடியை மேலும் வலுப்படுத்தியுள்ளதாக சர்வதேச அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இது பிராந்தியத்தில் நிலவும் பதற்றத்தை மேலும் அதிகரிக்கக்கூடும் என்றும், தூதரக ரீதியிலான பேச்சுவார்த்தைகளுக்கான வாய்ப்புகளைக் குறைக்கும் என்றும் அஞ்சப்படுகிறது. (3)

## எந்தத் தலைவரை ஈரான் ந

## அவரே எங்கள்

### இஸ்ரேல் அதிரடி



(ஜெருசலேம்)

ஈரான் நாட்டின் அடுத்த உச்ச தலைவராக யாரைத் தேர்வு செய்தாலும் அவர் அழிக்கப்பட வேண்டிய இலக்காக இருப்பார் என்று இஸ்ரேல் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஈரானின் மறைந்த தலைவர் கமேனிக்கு அடுத்ததாகப் பதவியேற்கும் எவரையும் இலக்கு வைத்துத் தாக்குதல் நடத்துவோம் என இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் இஸ்ரேல் காட்ஸ் பகிரங்கமாக எச்சரித்துள்ளார்.

ஈரானிய ஆட்சிமுறை மாற்றப்பட வேண்டும் என்பதில் இஸ்ரேல் உறுதியாக இருப்பதை வெளிப்படுத்தும் வகையில் அவரது அறிக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரான் இழக்கும் வரை

# த்தம் சாத்தியமில்லை

## டிய பிரதமர்கள் அதிரடி




மாக நிராகரிக்க முடியாது.

கனேடியர்களைப் பாதுகாக்கவும், எமது நட்பு நாடுகளுக்குத் தேவைப்படும்போது அவர்களுடன் துணை நிற்கவும் நாம் எப்போதும் தயார்" எனத் தெரிவித்தார்.

மத்திய கிழக்கு மோதல்கள் வளைகுடா பிராந்தியத்திலுள்ள ஏனைய நாடுகளுக்கும் பரவி வருவது குறித்தும், சுற்றுலா மற்றும் பொதுமக்கள் நடமாட்டம் உள்ள பகுதிகளில் தாக்குதல்கள் நடத்தப்படுவது குறித்தும் அவுஸ்திரேலியப் பிரதமர் அல்பானிஸ் தனது கவலையைத் தெரிவித்ததாக பிபிசி செய்தி வெளியிட்டுள்ளது. (3)

# ஹார்முஸ் நீரிணை; சீனாவுக்கு மட்டுமே அனுமதி

## ஈரான் அறிவிப்பு



(டெஹ்ரான்)

அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் மேற்கொண்டு வரும் தாக்குதல்களின் பின்னணியில், ஹார்முஸ் நீரிணையை மூடியுள்ள ஈரான், சீனாவைச் சேர்ந்த எண்ணெய் கப்பல்களுக்கு மட்டும் அனுமதி வழங்கியுள்ளதாக அறிவித்துள்ளது.

போர்நிலையில் ஈரானுக்கு ஆதரவு தெரிவித்ததற்கும், பொருளாதாரத் தடைகளை ஏற்க மறுத்ததற்கும் நன்றி தெரிவிக்கும் வகையில் இந்த அனுமதி வழங்கப்பட்டதாக ஈரான் தெரிவித்துள்ளது.

உலகளவில் கடத்தப்படும் மசகு எண்ணெயின் சுமார் 20 சதவீதம் இந்த நீரிணை வழியாகச் செல்கின்ற நிலையில், இந்த மார்க்கத் தடைகள் சர்வதேச சந்தையில் எண்ணெய் விலை அதிகரிக்கக்கூடும் எனப் பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

# நியமித்தாலும்

# இலக்கு

அமைந்துள்ளதாக அல்ஜெஸீரா செய்திகள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக இஸ்ரேல் காட்ஸ் விடுத்துள்ள அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

"இஸ்ரேலை அழிக்கும் திட்டத்தைத் தொடரவும், அமெரிக்கா மற்றும் சுதந்திர நாடுகளுக்கு அச்சுறுத்தல் விடுக்கவும், பிராந்திய நாடுகளைப் பயமுறுத்தவும் ஈரானிய பயங்கரவாத ஆட்சியால் நியமிக்கப்படும் எந்தவொரு தலைவரும் எமது நேரடி இலக்காக இருப்பார்."

மேலும், ஈரானின் புதிய தலைவராக வருபவர் யாராக இருந்தாலும், அவர் எந்தப் பெயரைக் கொண்டிருந்தாலும் அல்லது எங்கே மறைந்திருந்தாலும் அவரைத் தேடிப்பிடித்து அழிப்போம் எனத் தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்கில் ஏற்கனவே போர்ப் பதற்றம் உச்சக்கட்டத்தை அடைந்துள்ள நிலையில், இஸ்ரேலின் இந்த நேரடி மிரட்டல் சர்வதேச அரங்கில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (3)




## தங்கப் பேழையில் இறுதிப் பயணம்

# மெக்சிக்கோ போதைப்பொருள் மன்னனின் ஆடம்பர அடக்கம்

(மெக்சிக்கோ சிட்டி)

மெக்சிக்கோவின் மிகவும் தேடப்பட்டு வந்த நிலையில் மரணமான போதைப்பொருள் கடத்தல் மன்னனான நெமேசியோ ஒஸ்குவேரா செர்வாண்டஸ் அல்லது "எல் மென்ச்சோ"சின் உடல் கடந்த திங்கட்கிழமை அன்று ஒரு தங்கப் பேழையில் வைத்து அடக்கம் செய்யப்பட்டது.

கடந்த பெப்ரவரி மாதம் 22ஆம் திகதியன்று ஜொலிஸ்கோ மாநிலத்தின் தபால்பா பகுதியில் மெக்சிக்கோ சிறப்புப் படையினர் நடத்திய அதிரடித் தாக்குதலில் அவர் படுகாயமடைந்து மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் அவர் உயிரிழந்தார்.

எல் மென்சோவின் மரணத்தைத் தொடர்ந்து மெக்சிக்கோவின் 20 மாநிலங்களில் வன்முறை வெடித்தது.

வாகனங்களுக்குத் தீ வைப்பு மற்றும் சாலை மறியல் போன்ற சம்பவங்களில் 70இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் அவரது உடல் ஒரு பளபளப்பான தங்க நிறப் பேழையில் வைக்கப்பட்டு, மெக்சிக்கோவின் பாரம்பரிய "பாண்டா" இசையுடன் ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டது.

இதேவேளை, இறுதிச் சடங்கின் போது மீண்டும் வன்முறை வெடிக்காமல் இருக்க தேசியக் காவல்படை மற்றும் இராணுவத்தினர் பெருமளவில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காங்கேசன்துறையில் மாபெரும் இசைத்திருவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட இசைக்குழுக் கலைஞர் சங்கம் நடத்தும் மாபெரும் இசைத்திருவிழா இன்று (6), நாளை (7) மற்றும் நாளை மறுதினம் (8) ஆகிய தினங்கள் பிற்பகல் 2 மணி முதல் காங்கேசன்துறை உல்லாசக் கடற்கரை பிரதேச சபை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

மேலதிக தகவல்களுக்கு 077 227 1142 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (3)

## சிரமதானம்

(கரணவாய்)

பருத்தித்துறை நகரசபை தொழிலாளர்களினால் பருத்தித்துறை மெத்தை கடை சந்திப் பகுதியில் பிரதான வீதியோரமாக காணப்பட்ட புற்கள் வெட்டப்பட்டு துப்பரவு செய்யப்பட்டுள்ளன.

தூய்மையான நகரமாக பருத்தித்துறை நகரை பேணும் செயற்றிட்டத்தின் கீழ் நகர சபைத் தலைவரின் அறிவுறுத்தலில் சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (8-60)

## சிறுபோக விவசாய நடவடிக்கை; கிளிநொச்சியில் கலந்துரையாடல்

(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தின் சிறுபோக விவசாய நடவடிக்கைகளை சீராக முன்னெடுக்கும் பொருட்டு இரணைமடு நீர்ப்பாசன திட்டத்தின் கீழ் கழிவு நீரை பயன்படுத்தி பாரம்பரியமாக பயிர்ச் செய்கையில் ஈடுபடும் அமைப்புக்களுடனான கலந்துரையாடல் மாவட்ட அரசாங்க அதிபர் சு. முரளிதரன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றைய தினம் இடம்பெற்றது.

இக்கலந்துரையாட்லில் சிறுபோக விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான நீர்த் தேவைகளை பூர்த்தி செய்யும் வழிவகைகள் ஒவ்வொரு கமக்கார அமைப்பினருக்குமான சிறுபோக விவசாய தேவைக்கான நீர்ப்பாசன ஒதுக்கீடு தொடர்பாக தீர்மானிக்கப் பட்டது.

இங்கு தீர்மானிக்கப்பட்டதற்கமைய விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுறுத்தப் பட்டதுடன் கமநல சேவை நிலையத்துடன் இணைந்து நடவடிக்கைகளை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் கமக்கார அமைப்புகள், நீர்ப்பாசன திணைக்கள பொறியியலாளர், கமநல அபிவிருத்தி திணைக்கள பிரதிநிதி, கமக்கார அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் துறைசார்ந்த உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (8-316-315)



புதுக்குடியிருப்பு அன்னை ஸ்ரீ சாரதா இல்ல புதிய கட்டடம், கணனி வகுப்பறைகள், தொழில் துறை கட்டட அறைகள் மற்றும் ஞாபகார்த்த கல்வெட்டுக்கள் திறந்து வைக்கும் நிகழ்வுகள் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது. (படம்: சதீஸ்)

## சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 250 | 300 | 300 | 250 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 160 | 240 | 190 | 320 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 300 | 300 | 280 | 350 |
| தக்காளி | 100 | 80 | 100 | 150 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 180 | 200 | 200 | 180 | 100 |
| கோவா | 200 | 100 | 200 | 150 | 120 | 150 |
| கரட் | 250 | 380 | 400 | 350 | 350 | 320 |
| பூசணி | 100 | 120 | 150 | 150 | 100 | 80 |
| புடோல் | 100 | 150 | 100 | 150 | 150 | 130 |
| வாழைக்காய் | 150 | 180 | 200 | 200 | 140 | 120 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 300 | 300 | 180 | 220 |
| பெரிய வெங்காயம் | 160 | 200 | 180 | 200 | 160 | -- |
| பாகற்காய் | 400 | 400 | 500 | 400 | 400 | 400 |
| வெண்டக்காய் | 250 | 200 | 200 | 200 | 250 | 200 |
| கருணைக் கிழங்கு | 200 | 250 | 300 | 400 | -- | 200 |
| பயற்றங்காய் | 400 | 400 | 400 | 400 | 350 | 200 |
| லீக்ஸ் | 100 | 250 | 300 | 300 | 300 | 270 |
| பீற்றூட் | 100 | 100 | 200 | 150 | 150 | 120 |
| கறிமிளகாய் | 600 | 300 | 400 | 250 | 250 | 400 |
| முருங்கைக்காய் | -- | -- | 2000 | -- | -- | -- |
| போஞ்சி | 300 | 250 | 400 | 400 | 300 | 330 |
| கத்தரிதம்புள்ள | 250 | 200 | 250 | 200 | -- | -- |
| கீரை - 1 பிடி | 100 | 80-140 | 150 | 120 | -- | 90 |
| தேசிக்காய் | 100 | 150 | 100 | 150 | 150 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 140 | 80 | 100-160 | -- | 120 |
| இராசவள்ளி | 300 | 550 | 400 | 350 | -- | 350 |
| வெங்காயப்பூ | 180 | 80 | 200 | 200 | -- | -- |
| முள்ளங்கி | 100 | 160 | 150 | 150 | 150 | 70 |
| பொன்னாங்காணி | 100 | 90 | 100 | 60 | -- | 50 |
| வல்லாரை | 60 | 70 | 80 | 80 | -- | 80 |
| ஈரப்பலா | 100 | 200 | 100 | 150 | -- | 100 |

## இராசிபலன்

06.03.2026
மாசி 22, வெள்ளிக்கிழமை
திருதியை முன்னிரவு 6.46 மணிவரை

அத்தம் முற்பகல் 10.17 மணிவரை
சுப நேரம் 6.25-7.55 மணிவரை
இராகுகாலம் 10.55-12.25 மணிவரை

சங்கடகர சதுர்த்தி விரதம்,
சந்திராஷ்டமம்: பூரட்டாதி

வளவன்




பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், கடுமையான எதிர்ப்புகள் கூட திடீரென சாதகமாகி விடும், கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, உற்சாகமான நாள்.




தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றமுண்டு, உறவினர்கள் சந்திப்பால் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொழில் ரீதியான பயணம் அனுகூலம் தரும்.




உள்ளன்போடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும், புதிய பொறுப்புக்களும் சுமைகளும் அதிகரிக்கும், காரிய வெற்றிக்கு இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள்.




பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், பகையொன்று நட்பாகலாம், கூட்டு முயற்சிகள் வெற்றி தரும்.




எதிர்கால நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும், பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர்கள்.




தொழில் வளர்ச்சி கூடும், நினைத்த காரியம் நிறைவேறும் வாய்ப்புண்டு, உடன் பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கும், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள்.




பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, வியக்கும் செய்திகள் வீடு வந்து சேரலாம்.




பொதுவாழ்வில் வீண் பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, காரிய வெற்றிக்கு இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள்.




பாராட்டும் புகழும் கூடும், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், போசன சுகமுண்டு, நினைத்த காரியம் நிறைவேறும் வாய்ப்புண்டு.




பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், கல்யானக் கனவுகள் நனவாகலாம், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும், உடல் நலனில் கவனம் தேவை.




உறவினர்கள் உங்கள் மனம் போல நடந்து கொள்வர், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள்.




குடும்ப பெரியவர்களின் ஆதரவைப் பெறுவீர்கள், நிதி நிலை உயர்ந்து நிம்மதி கிடைக்கும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.

தக்க சமயத்தில் உதவுபவனே உண்மையான நண்பன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரிசனம் 01 viii

# யாழ்.போதனா வைத்தியசாலை

புருசோத்தமன்



(நேற்றைய தொடர்ச்சி)

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு இடமாற்றம் பெற்று வருகின்ற மருத்துவ நிபுணர்கள் மற்றும் இங்கிருந்து இடமாற்றம் பெற்றுச் செல்கின்ற மருத்துவ நிபுணர்கள் தொடர்பில் பொது மக்கள் தரப்பில் இருக்கக்கூடிய கருத்தியல் பற்றிக் கவனத்தில் எடுப்பது மிகவும் முக்கியமானது.

அதாவது, ஒரு மருத்துவ நிபுணர் யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமையேற்று சில வாரங்களில்-சில மாதங்களில் இடமாற்றம் பெற்று அல்லது வெளிநாடுகளுக்குச் செல்கின்ற நிலைமைகளும் உண்டு.

அவ்வாறான சம்பவங்கள் நடைபெறுகின்ற போது, யாழ்.போதனா வைத்தியசாலையில் அவர்களுக்கு சரியான ஒத்துழைப்பு வழங்கப்படவில்லை-சமாந்தரமான மருத்துவ நிபுணர்கள் அவர்களுக்குக் கடுமையான இடர்களைக் கொடுத்தனர். அதன் காரணமாகவே குறித்த மருத்துவ நிபுணர்கள் வந்த கையோடு வெளியேற வேண்டியதாயிற்று என்ற குற்றச்சாட்டுக்கள் பரவலாக உண்டு.

பிரஸ்தாப குற்றச்சாட்டுக்களில் இருக்கக்கூடிய உண்மைத்தன்மை என்பதற்கு அப்பால், குறித்த தகவல் யாழ்.போதனா வைத்தியசாலை வட்டாரங்களில் இருந்தே கசிந்தன என்பதும் பொதுமக்கள் அது பற்றி சிலாகிக்கின்றார்கள் என்பதும் இங்கு கவனிக்கப்பட வேண்டிய விடயம்.

இவற்றைக் கூறுகின்ற போது, நீங்கள் பொதுப்படையாக எழுதுவது நியாயமன்று. நீங்கள் குறிப்பிடுவது போல சம்பவங்கள் நடந்திருந்தால், அதனை உறுதிப்படுத்தும் வகையில் ஒருசில உதாரணங்களையேனும் இங்கு முன்வைக்க வேண்டும் என்ற கருத்தை யாரேனும் கொண்டிருப்பார்களாயின் அதில் நியாயமுண்டு.

அத்தகையவர்களின் நியாயமான கருத்துத் தொடர்பில் ஒரு சில உதாரணங்களை இங்கு தருவது நம் கடமை.

ஆம், அம்பாறை மாவட்டத்திலுள்ள அஷ்ரப் மெமோறியல் வைத்தியசாலையில் முறிவு நெறிவு வைத்திய நிபுணராக இருந்த மருத்துவர் காண்டீபன் அவர்கள் விருப்பத்தோடு யாழ்.போதனா வைத்தியசாலைக்கு இடமாற்றம் பெற்று வந்திருந்தார் என்றும் ஆனால் இங்கு அவருக்குக் கடுமையான இடைஞ்சல் ஏற்படுத்தப்பட்டதனால், அவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் இருந்து வெளியேறினார் என்பதுமான விடயம் நம் மக்கள் மத்தியிலும் வைத்தியசாலையுடன் தொடர்புபட்ட தரப்புக்களாலும் பரவலாகப் பேசப்பட்டது.

இது போல, நரம்பியல் நிபுணர் மருத்துவர் ஜீவகன்; ஐயா! சாமி போதும். வேண்டாம் என்று இங்கிருந்து வெளிக்கிட்டு விட்டார் என்ற தகவல்களும் உண்டு.

இவை தொடர்பில் இருக்கக்கூடிய உண்மைத் தன்மைகளை ஆய்ந்து மெய்பொருள் காண்பது தான் அறிவுடைமையாக இருந்தாலும் பொதுமக்கள்-சம்பந்தப்பட்ட நோயாளர்கள் அது பற்றிப் பொது வெளியில் சம்பாசிக்கும் போது, அதனைச் செவிமடுக்கின்றவர்கள் இயல்பாகக் கோபம் கொள்வதற்கு வாய்ப்புண்டு. இதில் தவறுண்டு என விவாதிப்பது பொருத்தமற்றது.

எனவே இதுவிடயத்தில் யாழ்.போதனா வைத்தியசாலை நிர்வாகம் மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டும்.

ஏனெனில் பொதுமக்களால் பொது வெளியில் பேசப்படுகின்ற பிரஸ்தாப விடயங்கள் யாழ்.போதனா வைத்தியசாலையின் பெருமைக்குக் களங்கம் ஏற்படுத்தவல்லது என்பதை நாம் ஒருபோதும் மறந்து விடலாகாது.

### நோயாளர்களை பார்வையிடுதல்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பார்வையாளர் நேரத்தில் நோயாளர்களைப் பார்வையிடுவது, பார்வையாளர்களை மட்டுப்படுத்தும் பொருட்டு பாஸ் நடைமுறையைப் பின்பற்றுவது என்பன நீண்ட நெடுங்காலமாக இருக்கின்ற நடைமுறை.

இந்த நடைமுறை தேவையானது என்பதில் மாற்றுக் கருத்திருக்க முடியாது.

எனினும் எழுதாத யாப்புப் போல, ஆபத்தான நிலையில் கொண்டு வரப்பட்ட ஒரு நோயாளி தொடர்பில் அல்லது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட குறித்த நோயாளியைக் காப்பாற்றுவது இனிக் கடினம் என மருத்துவர்கள் கைவிரிக்கும் போது, பிரஸ்தாப நோயாளியை அவரது உற்ற உறவுகள் உயிரோடு பார்ப்பதற்கான விசேட ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். அதில் நியாயமும் தர்மமும் உண்டு.

உண்மையில் இத்தகைய விசேட ஏற்பாடுகளை அமுலாக்கும் போது, தனியார் வைத்தியசாலையில் கிடைக்கக் கூடிய சில விசேட வசதிகள் யாழ்.போதனா வைத்தியசாலையிலும் உண்டு என்பதாக நிலைமை மாறும்.

இத்தகைய நிலைமையானது, யாழ்.போதனா வைத்தியசாலையை நாடுவது தான் நல்லது என்ற நிலைப்பாட்டை பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத்தும்.

இஃது ஒரு சிறந்த முகாமைத்துவத்திற்கு அவசியமானது என்பதை யாரும் நிராகரித்து விடாதீர்கள்.

திங்கள் தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 992





காற்று கடும் புயலாக மாறிக் காட்டு மரம் ஒன்றை அடியோடு பெயர்த்துத் தள்ளியபோதுதான் நால்வரும் விழித்துக் கொண்டு சுற்றுமுற்றும் பார்த்தார்கள். கடுமையான புயல் காற்று அடிப்பதையும் ஏரி கொந்தளித்துப் பேரலைகள் 'ஓ' என்ற இரைச்சலுடன் எழுந்து விழுவதையும் பார்த்தார்கள்.

திடீரென்று நந்தினி, "ஐயோ! படகு எங்கே?" என்று அலறினாள். கட்டிப் போட்டிருந்த இடத்தில் படகைக் காணவில்லை. உற்றுப் பார்த்தபோது வெகுதூரத்தில் படகு அலைகளால் மொத்துண்டு நகர்ந்து நகர்ந்து போய்க்கொண்டிருந்தது.

"ஐயோ! இப்போது என்ன செய்வது?" என்று நந்தினி அலறினாள்.

"உங்கள் இருவருக்கும் குதிரை ஏறத்தெரிந்தால் ஏறிப்போய் விடுங்கள். நாங்கள் சமாளித்துக் கொள்கிறோம்" என்றான் வந்தியத்தேவன்.

"இந்தப் புயல் காற்றில் காட்டு மரங்கள் பெயர்ந்து விழுந்து எங்களைச் சாகடிப்பதற்கு வழி செய்கிறீர்களா?" என்று நந்தினி கேட்டாள்.

"அதெல்லாம் வேண்டாம் புயலின் வேகம் தணியும் வரையில் இங்கேயே இருந்து விடுவோம். அங்கே போய் என்ன செய்யப் போகிறோம்? சமையலுக்குப் பண்டங்கள் இருக்கின்றன. பாடுவதற்கு மணிமேகலை இருக்கிறாள். இவ்வளவு சந்தோஷமாகச் சமீபத்தில் நான் இருந்ததில்லை!" என்றார் கரிகாலர்.

"இளவரசே! அது சரியல்ல! சம்புவரையரும், கந்தமாறனும் என்ன நினைப்பார்கள்?" என்றான் வல்லவரையன்.

"இவரே புலியைத் தேடிச் சென்றபோது படகை அவிழ்த்துவிட்டு விட்டார் போலிருக்கிறது!" என்றாள் நந்தினி.

"அக்கா! ஏன் வீண் பழி சொல்கிறீர்கள்? இவர் வந்த போது படகு கரையோரமாகத்தானே இருந்தது. யாரும் கவலைப்பட வேண்டாம், என் தந்தை இந்தப் புயல் காற்றைப் பார்த்ததும் நம் துணைக்குப் பெரிய படகுகளை அனுப்பி வைப்பார்!" என்றாள் மணிமேகலை.

அவள் கூறியது சற்று நேரத்துக்கெல்லாம் உண்மையாயிற்று. ஏறக்குறைய கப்பல் என்று சொல்லத்தக்க இரு பெரும் படகுகள் அத்தீவை நோக்கி வந்தன. அவற்றில் ஒன்றில் பெரிய சம்புவரையரே இருந்தார். நாலு பேரும் பத்திரமாய் இருப்பதைக் கண்டு மிக்க மகிழ்ச்சி அடைந்தார். அவர்களை ஏற்றிக் கொண்டு அலைகடல் போல் பொங்கிக் கொந்தளித்த ஏரியில் இரண்டு படகுகளும் திரும்பிச் சென்றன. சம்புவரையரைத் தவிர, மற்ற நால்வரின் உள்ளங்களிலும் கடும் புயல் வீசிக் கொந்தளிப்பை உண்டாக்கிக் கொண்டிருந்தது.

### பாகம் 5

### 1ஆம் அத்தியாயம்

### மூன்று குரல்கள்

நாகைப்பட்டினம் சூடாமணி விஹாரத்தில் பொன்னியின் செல்வர் பொறுமையுடன் காத்துக் கொண்டிருந்தார். தஞ்சைக்குச் சென்று தந்தை தாயாரைப் பார்க்க வேண்டுமென்ற ஆர்வம் அவர் உள்ளத்தில் பொங்கிக் கொண்டிருந்தது.


இலங்கையின் அரசைத் தாம் கவர எண்ணியதாகத் தம் மீது சாட்டப்பட்ட குற்றம் ஆதாரமற்றது என்று நிரூபிக்க அவர் ஆர்வம் கொண்டிருந்தார். தந்தையின் வாக்கை மீறி நடந்ததாகத் தம் மீது ஏற்படக்கூடிய அபவாதத்தைக் கூடிய விரைவில் போக்கிக் கொள்ளவும் அவர் விரும்பினார்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## குப்பை மேட்டில் கோமேதகம்



அரசன் ஒருவன் சிறைச் சாலையைப் பார்வையிட வந்தான்.

அங்கிருந்த கைதிகள் ஒவ்வொருவரையும் அழைத்து அவர்கள் சிறைக்கு வந்ததற்கான காரணத்தைக் கேட்டான்.

முதல் கைதி, "அரசே! நான் எந்தக் குற்றமும் செய்யவில்லை. என்னைத் தவறுதலாகச் சிறையில் அடைத்து விட்டனர். தாங்கள்தான் அருள் கூர்ந்து என்னை விடுவிக்க வேண்டும்" என்று வேண்டினான்.

அடுத்த கைதி, "அரசே! எனக்கும் நீதிபதிக்கும் தகராறு. அதனால் அவர் எனக்குச் சிறைத்தண்டனை தந்துவிட்டார். நான் எந்தப் பாவமும் அறியாதவன்" என்று கெஞ்சினான்.

இப்படியே எல்லாக் கைதிகளும் தாங்கள் எந்தக் குற்றமும் செய்யாத நல்லவர்கள் என்றும் சிறையில் கிடந்து துன்புறுவதாகவும் கூறினார்கள்.

அரசன் பொறுமையாக எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்தான்.

கடைசியாக வந்த ஒரு கைதி மட்டும், "அரசே ! இந்தக் கையினால்தான் நான் திருடினேன். அதற்காகச் சிறைத் தண்டனை அனுபவிக்கிறேன்" என்றான்.

இதைக் கேட்டதும் அரசன் கடுங் கோபம் கொண்டான். சிறைக் காவலர்களைப் பார்த்து, "நல்லவர்கள் மட்டும் இருக்கக் கூடிய இந்தச் சிறைக்குள் இத்திருடனை யார் கொண்டு வந்தது? இவன் இங்கிருக்கும் எல்லோரையும் திருடர்களாக்கி விடுவான்.

இவனை உடனே வெளியே விரட்டி விடுங்கள்!" என்று கத்தினான்.

அரசனின் குறிப்பை உணர்ந்த காவலர்கள் அவனை விடுதலை செய்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் வழக்கு மூன்றாவது சந்தேக நபராக சுரேஷ் சலே

## நீதிமன்றில் சி.ஐ.டி அதிரடி அறிக்கை

அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் பிரதானி ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சுரேஷ் சலே, உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் மூன்றாவது சந்தேகநபராகப் பெயரிடப் பட்டுள்ளார்.

அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் பிரதானியும் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரலு மான சுரேஷ் சலே, கடந்த பெப்ரவரி 25ஆம் திகதி பேலியகொடை யில் வைத்து கைது செய்யப்பட்டிருந்தார்.

இதனைத் தொடர்ந்து, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் தற்காலிக ஏற்பாடுகளின் கீழ் சுரேஷ் சலேயை 90 நாட்கள் தடுப்புக்காவலில் வைத்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தது.

இவ்வாறானதொரு பின்னணியில் சுரேஷ் சலேயைத் தடுப்புக் காவலில் வைத்திருப்பது குறித்து குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நேற்று கோட்டை நீதிவான் நீதிமன்றில் முக்கிய விடயங்களை அறிக்கையிட்டது.

குறித்த அறிக்கையில் வவுணதீவு பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகளை திசைதிருப்பப்பட்டமை மற்றும் சாய்ந்தமருது வீட்டில் இடம் பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளுடன் தொடர்புடையதாக கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றில் நிலுவையில் உள்ள 35882/24 இலக்க வழக்கின் மூன்றாவது சந்தேக நபராக சுரேஷ் சலே பெயரிடப்பட்டுள்ளதாக குற்றப்புலனாய்வுதிணைக்களம் மன்றுக்கு அறிவித்துள்ளது. (ம-7)

# ஈரான் கப்பல் மீதான தாக்குதல் அரசாங்கம் கண்டிக்காதது ஏன்?

## கேள்விக்கணை தொடுத்தார் தயாசிறி

ஈரானியக் கப்பலை அமெரிக்கா தாக்கிய விடயம் தொடர்பில் இலங்கை அரசாங்கம் எத்தகைய நடவடிக்கையை எடுக்கப் போகின்றது எனப் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர கேள்வி எழுப்பியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய போதே அவர் இந்தக் கேள்வியை முன்வைத்துள்ளார்.

இதுகுறித்து மேலும் கருத்துரைத்த அவர், இந்தியக் கடற்படைப் பயிற்சிக்காக ஈரானியக் கப்பல் இலங்கைக் கடற்பரப்பிற்கு வருகை தந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இவ்வாறானதொரு சூழலில் ஒரு நாடாக நாம் பாரிய நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளோம்.

குறிப்பாக 1971 ஆம் ஆண்டு சிறிமாவோ பண்டாரா நாயக்க காலத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் பிரகடனத்திற்கமைய இந்தியப் பெருங்கடலை ஒரு அமைதி வலயமென ஏற்றுக்கொண்டோம்.

ஆனால் இன்று நாம் பெரும் அச்சுறுத்தலில் உள்ளோம்.

இலங்கையில் வாழும் முஸ்லிம் மக்கள் ஈரான் மீதான இந்தத் தாக்குதல் குறித்து பெரும் வேதனையிலும் ஏமாற்றத்திலும் உள்ளனர். அரசாங்கம் இதுவரை இந்தத் தாக்குதலைக் கண்டிக்கவில்லை.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் என்ன செய்யப்போகிறது? எங்களை மேலும் சிக்கலில் தள்ளப்போகிறீர்களா எனக் கேள்வி எழுப்பினார். (ம-7)

# மனிதாபிமான மீட்புப் பணியில் இந்தியக் கடற்படையும் பங்கேற்பு

இலங்கைக்கு அருகே அமெரிக்க நீர்மூழ்கிக்கப்பலின் தாக்குதலுக்கு இரையாகி கடலில் மூழ்கிய ஈரானிய போர்க் கப்பலிருந்து காணாமல் போனவர்களை தேடும் பணிகள் இலங்கைக் கடற்படையினால் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன .

இந் நிலையில் குறித்த தேடுதல் மற்றும் மீட்புப் பணிகளில் இலங்கைக் கடற்படையுடன் இந்தியக் கடற்படையும் இணைந்துள்ளது. குறித்த ஈரானிய கப்பல்மீதான தாக்குதல் இலங்கை கடற்படையில் மீட்புப் பணிஎன்பன சர்வதேச அரங்குகளில் பெரிதும் பேசு பொருளாகியிருந்தது.

நேற்றையதினம் பாராளுமன்றிலும் குறித்த மீட்பு பணி தொடர்பில் ஆளும்கட்சி மற்றும் எதிர்க்கட்சி இடையே காரசாரமான விவாதங்கள் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## உலக பதற்றத்துக்கு மத்தியிலும்

# நாட்டை உலுக்கும் துப்பாக்கிச் சூடுகள்

மத்துகம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் உள்ள வீடொன்றை இலக்கு வைத்து இனம் தெரியாத நபர்களால் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், வீட்டின் ஜன்னல்களில் துப்பாக்கிச் சூட்டின் சேதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. எனினும் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் வீட்டிலிருந்த எவருக்கும் காயங்களோ அல்லது உயிர் ஆபத்தோ ஏற்படவில்லை என மத்துகம பொலிஸாரின் முதற்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. (ம-7)

## காணி உறுதிப்பத்திர மோசடி

# பெண் சட்டத்தரணிக்கு 12 ஆண்டுகள் சிறை

(கொழும்பு)

போலி உறுதிப்பத்திரங்களைத் தயாரித்த குற்றச்சாட்டில் குற்றவாளியாகக் காணப்பட்ட பெண் சட்டத்தரணி ஒருவருக்குக் கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று வியாழக்கிழமை 12 வருட சிறைத்தண்டனை விதித்துள்ளது.

பொரளைப் பிரதேசத்தில் உள்ள காணியொன்றுக்குப் போலி உறுதிப்பத்திரம் தயாரித்தமை உள்ளிட்ட இரண்டு குற்றச்சாட்டுகளின் கீழ் இடம்பெற்று வந்த நீண்ட வழக்கு விசாரணையின் பின்னர் பிரதிவாதிக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ள இரண்டு குற்றச்சாட்டுகளும் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டமையை தொடர்ந்து கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி லங்கா ஜயரத்னவினால் குறித்த 12 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (ம-7)

---

சிறந்தவனாக இரு, சிறந்ததை வைத்திரு, சிறந்ததை செய்

– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# இலங்கை அரசாங்கம் மிகவும் நிதானமாக செயற்பட வேண்டும்

இலங்கைக்கு அண்மித்து தென்திசையாக இந்துமா கடற் பிராந்தியத்தில் பயணித்துக் கொண்டிருந்த ஈரானின் போர்க் கப்பலை நேற்று முன்தினம் (4) அமெரிக்கா தகர்த்துள்ளது.

இந்நிலையில் இலங்கையிடம் உதவி கோரப்பட்டதையடுத்து இலங்கைக் கடற்படை சம்பவ இடத்துக்குச் சென்று ஈரானிய கடற்படையினர் 35 பேரை மீட்டுள்ளது.

இங்குதான் தவிர்க்க முடியாத ஓர் இக்கட்டான சூழ்நிலைக்கு இலங்கை ஆளாகியுள்ளது.

அதாவது அமெரிக்காவுக்கும் ஈரானுக்குமிடையிலான போரில் ஈரானின் போர்க்கப்பல் இந்துமா கடலில் வைத்து அமெரிக்காவால் தகர்க்கப்பட்டபோது, அதில் காயமடைந்த ஈரானிய கடற்படையினரைக் காப்பாற்றுவதென்பது ஒரு மனிதாபிமான நடவடிக்கையாகும்.

இருந்தும் இம்மனிதாபிமானக் காரியத்தை அமெரிக்கா எவ்வாறாக நோக்கும் என்பதைப் பொறுத்தே அமெரிக்க – இலங்கை உறவு தீர்மானிக்கப்படும்.

தவிர, அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பலால் தகர்க்கப்பட்ட கணத்தில் தமக்கு உதவுமாறு காயப்பட்ட ஈரானிய கடற்படையினர் இலங்கையிடம் கோரிக்கை விடுத்தும் இலங்கை அது தொடர்பில் உடனடியாக உதவி செய்யவில்லை என்ற குற்றச்சாட்டும் உண்டு.

குறித்த குற்றச்சாட்டுத் தொடர்பில் ஈரானின் நிலைப்பாடு என்ன? என்பதையும் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

ஆம், காலப் பிழை போல இலங்கை ஓர் இக்கட்டான சூழ்நிலைக்கு ஆளாகி இருக்கக் கூடிய இந்நேரத்தில், ஈரானின் இன்னோர் கப்பல் கொழும்புத்துறைமுகத்தில் தரிப்பதற்கான கோரிக்கையை இலங்கையிடம் விடுத்துள்ளது.

குறித்த கோரிக்கை தொடர்பில் எந்தத் தீர்மானத்தையும் எடுக்க முடியாத இரண்டும் கெட்டான் நிலையில் இலங்கையுள்ளது.

இங்குதான் ஈரானின் குறித்த கப்பல் தாக்குதலுக்கு ஆளாகுமாக இருந்தால், அது இலங்கை மீது ஈரானுக்குக் கடும் வெறுப்பை ஏற்படுத்தும்.

அதேவேளை குறித்த கப்பலை கொழும்புத் துறைமுகத்தில் தரிப்பதற்கு இலங்கை அனுமதி வழங்குமாக இருந்தால், அது இலங்கை மீது அமெரிக்காவுக்குக் கடும் கோபத்தை உண்டுபண்ணும்.

இங்குதான் இலங்கை மிகவும் விழிப்பாக இருந்து நிதானமாக தீர்மானங்களை எடுக்க வேண்டிய சூழ்நிலைக்கு ஆளாகியுள்ளது.

ஆம், இலங்கை அமைந்துள்ள இந்துமா கடல் பிராந்தியம் உலக வல்லரசுகளுக்கு வேண்டியதொன்று.

இந்நிலையில் இலங்கை தனது அண்டை நாடான இந்தியாவின் ஆலோசனையுடன் தனது இராஜதந்திர நகர்வுகளை மேற்கொள்வது தான் புத்திசாலித்தனமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏப்ரல் மாத இறுதி வரை எரிபொருளுக்கு தட்டுப்பாடில்லை

## இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனம் தெரிவிப்பு




(கொழும்பு)

இலங்கையில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் இறுதி வரை எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை என இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவும் பதற்றமான சூழல், இலங்கையின் எரிபொருள் இறக்குமதியில் எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை என கூட்டுத் தாபனத்தின் தலைவர் டி.ஏ.ராஜகருண தெரிவித்துள்ளார்.

இதேவேளை 90,000 மெற்றிக் தொன் மசகு எண்ணெயை ஏற்றிய கப்பல் ஒன்று, எதிர்வரும் மார்ச் 11 ஆம் திகதி நாட்டை வந்தடையவுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய அரபு இராச்சியத்தின் புஜைரா துறைமுகத்திலிருந்து நேற்று முன்தினம் இரவு புறப்பட்ட இந்தக் கப்பல், தற்போது இலங்கையை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கின்றது.

மத்திய கிழக்கில் சவால்கள் நிலவினாலும், இலங்கைக்கு மசகு எண்ணெயைத் தடையின்றி கொண்டுவருவதற்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் காலங்களில் எவ்வித இடையூறுமின்றி எரிபொருளை விநியோகிப்பதற்கான முழுமையான கொள்ளளவு மற்றும் வசதிகள் கூட்டுத் தாபனத்திடம் உள்ளதாக தலைவர் மேலும் உறுதியளித்துள்ளார். (நி)

# ஸ்ரீ அம்மா பகவானின் 77 வது ஜென்மதின விழா

(நல்லூர்)

அன்பால் அகிலத்தை ஆளும் கலியுக அவதார மூர்த்தியான ஸ்ரீ பரஞ்சோதி பகவதி பகவானின் (அம்மா பகவான்) 77வது ஜென்மதின வழிபாடுகள் நாளை(07) சனிக்கிழமை மலை 3.00 மணியளவில் நல்லூர் வடக்கு வீதியில் அமைந்துள்ள மகேஸ்வரன் மணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணம் ஏகத்துவ அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந் நிகழ்வில் விசேட பாதுகை அபிஷேகம், பஜனை விசேட பூஜைவழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வின் சிறப்பம்சமாக பக்தர்கள் பால், தயிர், இளநீர், சந்தனம், குங்குமம், விபூதி, மஞ்சள் உள்ளிட்ட திரவியங்கள் கொண்டு பகவானின் திருப்பாதங்களுக்கு தம்து கரங்களாலேயே



அபிஷேகம் செய்வதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தொடர்ந்து பகவானின் பிறந்த தின கொண்டாட்டங்களும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறித்த நிகழ்வு தொடர்பிலான மேலதிக விபரங்களை 076 217 7697, 077 364 7436 எனும் இலக்கங்களை தொடர்பு கொள்வதன் மூலம் பெற்றுப் பயனடைய முடியும் என ஏகத்துவ அமைப்பு தெரிவித்துள்ளது. (ம-7)

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள் (வாக்கிய பஞ்சாங்கம்) (06.03.2026 - 24.04.2028)




**நெஞ்சில் துணிவும், செயலில் உண்மையும் கொண்டு விளங்கும் கும்ப இராசி வாசகர்களே!**

உங்களின் இராசிக்கு இராசிநாதனும், விரையாதிபதியுமான சனி பகவான் தனஸ்தானத்தில் அமர்ந்து சுகஸ்தானத்தையும், அட்டம ஸ்தானத்தையும், லாபஸ்தானத்தையும் பார்வை இடுவது நீங்கள் எதிர்பார்த்த காரியம் கைகூடும் சூழ்நிலையை தருவார். எதை நினைத்து இது நாள் வரை வருத்தம் கொண்டீர்களோ.. இனி அதிலிருந்து விடுதலை பெற்று நன்மை அடைவீர்கள். எதை சாதனை என்று நினைத்து செயற்பட்டீர்களோ அதனை செயற்படுத்தி காட்டுவீர்கள். வாழ்க்கை இனிதாக வாழ்வதற்குதான் என்பதை உணர்ந்து செயற்படுவீர்கள். பாத சனியாக சனி அமர்வதால் இனி 06.03.2026 முதல் குடும்ப உறுப்பினர்களிடம் வாக்குவாதம் செய்வதை தவிர்க்கவும்.

உடல் நலனின் கவனம் செலுத்தும் படியான சூழ்நிலை உண்டாகும். எதைச் செய்தாலும் கவனமுடன் செயற்பட வேண்டியது அவசியமாகும். தாயாருக்கு பீடையும், மருத்துவ செலவும் செய்ய வேண்டி வரும், வீடு பராமரிப்பு செலவு செய்ய வேண்டிவரும். புதிய வீடு கட்ட முயற்சி செய்தால் விரைவில் நடக்கும். கனவுகளை நனவாக்க அதற்கான யுக்திகளை கையாளுவீர்கள். புதிய திட்டம் எதுவாக இருந்தாலும் சில காலம் தள்ளி வைத்து விட்டு இருப்பதை சிறக்க செய்யும் பணியை செயற்படுத்துவது நல்லது. குடும்ப சனி, பாத சனி நடப்பதால் உறவினர்களிடம் சில கருத்து வேறுபாடுகள் வரும். எதை பேசினாலும் கவனமுடன் பேசுவது நல்லது.

உங்களின் தொழிலில் நல்ல முன்னேற்றம் உண்டாகும். லாபஸ்தானத்தை சனி பகவான் பார்வை இடுவது மிக சிறப்பான பலன்களை பெற்று தரும். எதை செய்தால் நல்லதோ அதை மட்டும் கவனம் செலுத்தி செயற்படுவது நல்லது. சனி பகவானை ஓராண்டு குரு பார்வைச் செலுத்துவதால் பாத சனி முதலில் பெரிய பாதிப்பை தராது எனினும் பின்பு அதன் தாக்கம் இருக்கும். கலைத்துறையினர் முன்னேற்றம் காண்பீர்கள். கடந்த கால நிகழ்வுகளை மறந்து எதிர்கால சிந்தனைகளை உருவாக்கி கொண்டு செயற்படுவது நல்லது. வாகன ஓட்டிகள் சாலைகளில் சற்று அவசரமின்றி கவனமாக செல்வது நல்லது.

அட்டம ஸ்தானத்தை சனி பார்வை இடுவது அடுத்தவருக்கு பிணையம் இடுதல் பணியின் போது பிறர் பழியை தான் ஏற்றுக் கொள்தல் இது போன்ற காரியங்களை தவிர்ப்பது நல்லது. கூட்டுத் தொழிலில் எச்சரிக்கையுடன் கண் காணித்து செயற்படுவது நல்லது. ஒன் லைன் வர்த்தகம் அதிக முதலீடுகளை தவிர்ப்பதும் ஆடம்பர பொருட்கள் மீது முதலீடு செய்வதையும் தவிர்ப்பது சாலச் சிறந்தது.

**பரிகாரங்கள்**

சனிக்கிழமைகளில் ஆஞ்சநேயர் வழிபாடு செய்து வெற்றிலை மாலையில் ராம் என எழுதி நெய் தீபம் ஏற்றி வாழைப்பழம் வைத்து வேண்டிக் கொள்ள நீங்கள் வேண்டிய படி அனைத்து காரியமும் வெற்றியை தரும். பொருளாதார நிலை மேன்மை உண்டாகும்.




**அன்பும், மனித நேயமும் கொண்டு செயற்பட்டு வரும் மீன இராசி வாசகர்களே!**

உங்களின் இராசிக்கு லாபஸ் தானாதிபதியும், விரையாதிபதியுமான சனிபகவான் உங்களின் இராசியில் ஜென்ம சனியாக அமர்ந்து முயற்சி ஸ்தானத்தையும், களத்திரஸ்தானத்தையும், தொழில் ஸ்தானத்தையும் பார்வை இடுகின்றார். தொழிலில் சற்று வேகத்தையும், முதலீடுகளையும் அதிகபடுத்தி கொள்வீர்கள். மனவலிமையும் மனிதநேயமும் உங்களின் வாழ்க்கையை உயர்ந்த நிலையை அடைய செய்யும். சனி கொடுத்தால் யார் தடுப்பார். உங்களின் சுய ஜாதக பலன்களின் நற்பலன்களை சனி பகவான் உங்களுக்கு முழுமையாக வழங்குவார்.

உங்களின் இராசியில் சனி அமர்வது, சிறு உடல் உபாதைகளை அடிக்கடி சந்திக்க வேண்டி வரும். ஏழரை சனி காலம் என்பதால் எதிலும் உடல் நலனை கருத்தில் கொண்டு உண்ணும் உணவுகளை கவனித்து பசியாறுவது அவசியமாகும். சர்க்கரை, இதய நோய் உள்ளவர்கள் உணவில் கவனம் செலுத்துவது அவசியம். அடிக்கடி வெளியூர் பயணம் செய்ய வேண்டிவரும். முயற்சி ஸ்தானத்தின் சனி பார்வை இடுவது சொந்த முயற்சிகளுக்கு நல்ல பலன் கிடைக்கும். குரு பார்வை படும் காலம் உங்களுக்கு எதிர்பாராத பணவரவு வரும். சொத்து விற்பனை மூலமும், வங்கி கடன் மூலமும் பணம் பெறுவீர்கள். முக்கிய பிரமுகர்களின் சந்திப்பு நல்ல பலனை பெற்று தரும். வரவுக்கு மீறிய செலவுகளை தவிர்த்து விடுவீர்கள். ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். நட்பு வட்டத்தை பெருக்கி கொள்வீர்கள்.

இன்றைய நவீன காலத்தில் ஒன்லைன் மூலம் வர்த்தகம் செய்தல், கூட்டுத் தொழில் செய்தல். பல் துறை தொழில் முதலீடு செய்தலில் ஆர்வம் செலுத்துவீர்கள். சிலருக்கு கண் நோய் வர வாய்ப்பு உண்டாகும் என்பதால் கண்களை கவனிப்பது அவசியம். அரசியலிலும், பொது விடயங்களிலும் ஆர்வம் இல்லை என்றாலும் சில நேரம் அவர்களின் சந்திப்பு நீண்ட வாழ்க்கை சூழ்நிலையை மாற்றி அமைக்கும்.

தனியாகவோ அல்லது கூட்டாகவோ முதலீடு செய்ய வேண்டிவரும். உடல் நலம் குன்றியவருக்கு வைத்திய உதவி செய்தாலும், பசியுடன் இருப்பவருக்கு உணவு வழங்குவதும் உங்களின் கர்மவினை கழிவுகளை நீக்கி கொள்ள வாய்ப்பாக இப்போது அமையும். செய்யும் தொழிலை தெய்வமாக ஆக்கி கொண்டு செயற்படும் நீங்கள் தெய்வ பலத்துடன் சிறப்பாக செயற்படுவீர்கள்.

களத்திர ஸ்தானத்தை சனி பார்வையிடுவது கணவன் மனைவிக்குள் சின்ன சச்சரவு வரும், ஆனாலும் அது நீடிக்காது. உறவுகள் உங்களை குறை சொல்வது மனவருத்தத்தை தந்தாலும் உங்களின் வாழ்க்கையை பாதிக்காதபடி அளவோடு தொடர்பு கொள்வது நல்லது. கலை துறையினருக்கு நல்ல நிறுவனத்தின் ஒப்பந்தம் கிடைக்க பெறுவீர்கள். வேலை தேடுபவருக்கு நல்ல வேலையும், சம்பளமும் கிடைக்கும்.

**பரிகாரங்கள்:**

சனிக்கிழமை ராகு காலத்தில் (09.00 - 10.30) பைரவர் வழிபாடு செய்து நல்லெண்ணெய் தீபம் ஐந்து ஏற்றவும். வெள்ளிக்கிழமைகளில் மகாலட்சுமிக்கு நெய் தீபம் ஏற்றி தாழம்பூ குங்குமம் அர்ச்சனை செய்து வேண்டிக் கொள்ள சகல காரியமும் வெற்றியை தரும். பொருளாதார நிலை உயரும்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தடம்புரண்ட...

ஏற்றி வந்த குறித்த டிப்பரே இவ்வாறு தடம்புரண்டது. இந்நிலையில் டிப்பர் சாரதி சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,104)

## யாழில் காணா...

கடந்த வெள்ளிக்கிழமை குறித்த இரு மீனவர்களும் மீன்பிடிக்கச் சென்ற நிலையில் அவர்களின் படகு பழுதடைந்து இந்தியக் கடல் எல்லைக்குள் சென்று கொண்டிருந்தது.

இதனை அவதானித்த இந்திய மீனவர்கள் குறித்த படகினைத் தமது விசைப் படகால் இழுத்துச் சென்று மீனவர்களுக்கு உணவும் நீரும் வழங்கி இலங்கைக் கடல் எல்லையில் விட்டு விட்டுச் சென்றனர்.

பின்னர் கடல் அலையினால் அடித்துச் செல்லப்பட்ட படகு மீண்டும் இந்தியக் கடல் எல்லையால் சென்ற நிலையில் நேற்று வியாழக்கிழமை ஏழாவது நாள் தமிழ்நாட்டின் வடக்குக் கரையில் மீட்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தமிழ்நாடு அரியமான் கடற்பரப்பில் வைத்து தமிழ்நாடு கடலோரக் காவல் படையினரால் குறித்த இருவரும் கைது செய்யப்பட்டனர். (ம-7)

## சர்வதேச...

கோரிக்கை விடுத்துள்ளார்.

சர்வதேச கடற்பரப்பில் நிலவும் அபாயகரமான சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது கடலுக்குச் சென்றுள்ள மீனவர்கள் எக்காரணம் கொண்டும் சட்டவிரோத பயண வழிகளைப் பயன்படுத்தவோ அல்லது அறிமுகமில்லாத வலயங்களுக்குள் நுழையவோ தவிர்க்குமாறு வலியுறுத்தினார்.

கடலில் ஏதேனும் ஆபத்தான நிலைமையோ அல்லது அவசர நிலையோ ஏற்பட்டால், 24 மணி நேரமும் செயற்படும் MRCC நிலையத்துடன் அல்லது கடற்றொழில் திணைக்களத்தின் தகவல் தொடர்பு கட்டமைப்புடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறு அமைச்சர் அனைத்து மீனவர்களையும் படகு உரிமையாளர்களையும் கேட்டுக் கொண்டார். (ம-7)

## கசிப்பு உற்பத்தி...

இந்நிலையில் பொதுமக்கள் ஒன்றிணைந்து கசிப்பு உற்பத்தி நிலையத்தை முற்றுகையிட்டுள்ளனர்.

குறித்த நடவடிக்கையின்போது 600 லீற்றருக்கு மேற்பட்ட கோடா மற்றும் கசிப்பு என்பன பொதுமக்களால் கைப்பற்றப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ம-7,316)

## அமைச்சர் விஜித...

மித்த பகுதியில் ஈரானிய போர்க் கப்பல் ஒன்று அமெரிக்கப் படைகளால் மூழ்கடிக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் சர்வதேச அளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இச்சம்பவம் நிகழ்ந்த சில தினங்களிலேயே அமைச்சரின் இந்த விஜயம் அமைந்துள்ளமை அரசியல் ரீதியாக அதிக முக்கியத்துவம் பெறுகின்றது.

குறிப்பிட்ட ஈரானியப் போர்க் கப்பலானது, இந்தியாவில் நடைபெற்ற கூட்டு இராணுவப் பயிற்சியை நிறைவு செய்துவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்தபோதே இந்தத் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது.

மேலும் மற்றொரு ஈரான் கப்பல் இலங்கைக்கு அருகே நங்கூரமிட்டுள்ளது.

இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் வல்லரசு நாடுகளுக்கு இடையிலான மோதல் போக்கு அதிகரித்துள்ள சூழலில், இலங்கையின் பாதுகாப்பு மற்றும் கடல்சார் எல்லைகளின் உறுதித்தன்மை குறித்து இந்தியத் தரப்புடன் அமைச்சர் விஜித ஹேரத் முக்கிய பேச்சுகளை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன், இப்பிராந்தியத்தில் அமைதியைப் பேணுவது குறித்தும் விரிவாக ஆலோசிக்கப்படவுள்ளது. (ம-7)

## ஈரான் கப்பலைத்...

தாவது,

"ஈரானியக் கரையில் இருந்து சுமார் 2,000 மைல்கள் தொலைவில், சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து அமெரிக்கா இந்த அட்டூழியத்தைச் செய்துள்ளது.

இந்தியக் கடற்படையின் விருந்தினராக வந்து மாலுமிகளைச் சுமந்து சென்ற "டெனா" போர்க்கப்பல், எந்த வித எச்சரிக்கையுமின்றித் தாக்கப்பட்டது. எனது வார்த்தைகளைக் குறித்து வைத்துக்கொள்ளுங்கள். அமெரிக்கா தான் ஏற்படுத்தியுள்ள இந்த முன்னுதாரணத் திற்காக வருங்காலத்தில் கசப்பான விளைவுகளைச் சந்திக்க நேரிடும்" எனத் தெரிவித்துள்ளார். (ம-7)

## போதைப்...

செய்யப்பட்டுள்ளனர்.

கசிப்பு, கஞ்சா மற்றும் ஹெரோயின் போன்ற போதைப்பொருட்களுடன் குறித்த 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டவேளை அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ம-7,104)

## அமெ...

நடத்தியுள்ளதாக ஈரானின் புரட்சிகர காவல்படை நேற்று (5) தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலால் குறித்த கப்பல் தீப்பற்றி எரிந்து வருவதாக ஈரான் தரப்பில் கூறப்பட்ட போதிலும், இந்தச் சம்பவம் குறித்தோ அல்லது இந்த வாரத் தொடக்கத்தில் ஈரான் கூறிய தாகச் சொல்லப்படும் இதே போன்ற மற்றுமொரு தாக்குதல் குறித்தோ இதுவரை சுயாதீனமான உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை என ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது. (ம-7)

## ஈரானிய அமைச்சருடன் விஜித ஹேரத் உரையாடல்

மத்திய கிழக்கில் தீவிரமடைந்து வரும் போர்ப் பதற்றம் குறித்து இலங்கை அரசாங்கம் தனது ஆழ்ந்த கவலையை வெளியிட்டுள்ளது.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் ஈரானிய வெளிவிவகார அமைச்சர் அப்பாஸ் அரக்சி ஆகியோருக்கு இடையில் நேற்று இடம்பெற்ற தொலைபேசி உரையாடலின்போது இது குறித்துக் கலந்துரையாடப்பட்டது.

மோதல்களைத் தவிர்த்து, பிராந்தியத்தில் அமைதியை மீண்டும் நிலைநாட்ட இராஜதந்திர ரீதியிலான பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தை அவர் இதன்போது வலியுறுத்தினார். (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2026.03.05 சீட்டிழுப்பு இலக்கம் 6124
W 6 3 8 6 7 5

அத சம்பத
W 8 6 7 5
சீட்டிழுப்பு இலக்கம் 0699
National Lotteries Board

சுப தவசக்
திகதி 2026.03.05 சீட்டிழுப்பு இலக்கம் 0240
கடகம் 20 35 65 8704

தன நிதானய
திகதி - 2026.03.05
சீட்டிழுப்பு இலக்கம் - 2154
U 02 06 40 82 U

மெகா பவர்
திகதி 05/03/2026
சீட்டிழுப்பு இலக்கம் 2472
C 02 25 37 62 68

ஜய JAYA
திகதி 2026.03.05
சீட்டிழுப்பு இலக்கம் 0392
H 5 4 6 0

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4366
சீட்டிழுப்பு திகதி | 05.03.2026
D 24 44 60 64
D
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2026.03.05
சீட்டிழுப்பு இலக்கம் 1433
தனுசு 15 35 40 55 தனுசு

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுப்பிரி வாசனா
05.03.2026 வெற்றி வாரம் 0832
M 3 5 7 7 3 3
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22,924,044.80
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 3098
சீட்டிழுப்பு திகதி 2026.03.05 தினம் வியாழக்கிழமை
30 36 49 72 I
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.104,234,237.60
DLB

சனிதா
திகதி 05.03.2026 வெற்றி வாரம் 5259
07 20 21 36 F
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,800,976.80
ரூ. 50,000/-
DLB

சசிரி
வெற்றி வாரம் 928
சீட்டிழுப்பு திகதி 05.03.2026
வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 07 44 50
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.3,966,400.00
DLB

சீட்டிழுப்பு வாரம் 4810
சீட்டிழுப்பு திகதி 05.03.2026 தினம் வியாழக்கிழமை
34 39 40 61 மிதுனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,000,000.00
DLB

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
K 01 11 35 58 72
2274
05.03.2026
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.175,481,424.00
DLB

அட கோடிபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை
வெற்றி வாரம்: 2924
சீட்டிழுப்பு திகதி: 2026.03.05
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.97,201,966.40
33 53 64 66 Y
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாட்கள் தேவை

வவுனியா மற்றும் கிளிநொச்சியில்
இயங்கி வரும் வெளிநாட்டுப்
பொதிகள் சேவை நிறுவனம்
மற்றும் புடவைக் கடை
ஒன்றிற்கு முன்னனுபவம் உள்ள
ஆண், பெண் இருபாலாரும் தேவை.

**076 889 1308**
**077 606 1333**

(6964)



## A/L 2028

கலை, வர்த்தகப் பிரிவு
நாளை 9 மணி

**DMI**
**JAFFNA**

**077 848 0604**

(C-5135)



## NEC

பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம்.

யாழ் நகரின் முன்னணி
ஆசிரியர்களின் வழிகாட்டலில்

**A/L 2028**

கலை & வர்த்தகம்
ஆரம்பம்

காலம் - 07.03.2026 சனிக்கிழமை
நேரம் - காலை 9.00 மணி

தனிப்பாட அனுமதி வழங்கப்படும்
அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்

CONTACT FOR | 0765350999 | 0755350958

(C-5131)



## KBK – கொழும்புத்துறை

**A/L 2028 கணக்கீடு**

திரு.க.பா.பாலகஜன் SLTS
B.com(Jaf), H.N.Dip.in.Acc(ATI),
Dip.in.Edu(OUSL), M.com(Hons),Acc.spl

ஆரம்பம் :
08.03.2026 ஞாயிறு மாலை 4 மணி

A/L 2026, A/L 2027
புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

(C-5132)

| year | District |
|---|---|
| • 2018,2022,2023 (kili) | 1st Rank |
| • 2012,2013,2015,2019,2023(kili),2024 | 2nd Rank |
| • 2016,2017,2021,2022,2023 | 3rd Rank |
| • 2012,2015,2020 | 4th Rank |
| • 2013,2015,2016,2017,2022,2023,2024 | 5th Rank |

Every year more than 55 students university Entrance



## DCM

யாழ்.நகர்

**A/L 2028**

வேம்படி மகளிர் கல்லூரி அருகாமை

கலை, வர்த்தகப் புதிய பிரிவு

ஆரம்பம் : நாளை 07.03.2026 (சனி)
காலை 8.00 மணி

அனுமதிகளை அலுவலகத்தில்
பெற்றுக்கொள்ளலாம்.

நிர்வாகம் : 077 778 9815

(C-5136)



## மாப்பிள்ளை தேவை

01. கொக்குவில், இந்து, 1994, விசாகம், BSc(uk), UK citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (50294)
02. அளவெட்டி, இந்து, 1996, உத்தரம், BSc(forensic science), MSc(Toxicology), UK citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (30340)
03. சாவகச்சேரி, இந்து, 1990, உத்திரட்டாதி, Graduated, Divorce பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (35004)
04. சாவகச்சேரி, இந்து, 1995, கேட்டை, Psychiatrist, canada citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.(44161)
05. இளவாலை, இந்து, 1987, திருவாதிரை, Dentist Doctor, canada citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (32087)
06. சுன்னாகம், இந்து,1988, பரணி, MSc(UK), UK citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (54543)
07. வட்டுக்கோட்டை, இந்து, 1991, அவிட்டம், BSc in IT, Software Developer, Divorce, UK citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (54855)
08. கொக்குவில், இந்து, 1993, ஆயிலியம், BSc, Finance, Divorce பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (33221)
09. நல்லூர், இந்து, 1994, ஆயிலியம், Charted Accountant, Accountant, canada citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.(33133)
10. கரவெட்டி, இந்து, 1986, திருவாதிரை, BSc Masters, Divorce, switzerland citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (30162)

நீங்களாகவே எமது www.thaalee.com என்கின்ற website இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம். Unmarried, Divorce என்பன உண்டு.

**S.Sharma J.P**
www.thaalee.com

077 539 3728
077 803 8193

(C-5137)



வடமராட்சி மண்ணில்
63 வருட நீண்ட கல்விச் சேவையில்...

## சதாபொன்ஸ் கல்வி நிலையம்

2028 ம் ஆண்டுக்கான வர்த்தகப்பிரிவு
வகுப்புகள் ஆரம்பம்

07.03.2026 சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு
அனுமதிகள் இன்று முதல்

மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகளே வழங்கப்படும்.
நல்ல பெறுபேறுகளையும்,
மாணவர்களை தொகையாக பல்கலைக்கழகம் அனுப்பிய
வழமையான ஆசிரியர் குழாம் உள்ள ஒரே மையம்
என்றும் உங்கள் சேவையில்...

(C-5126)

யாழ்-பருத்தித்துறை வீதி,
மாலி சந்தி, அல்வாய்.

077 309 5176, 076 126 0105
021 226 3206




# 31 ஆம் நாள் நினைவும்
## வீட்டுக் கிருத்திய அழைப்பும்
## நன்றி நவிலலும்

கடந்த 04.02.2026 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தெய்வம்

## அமரர் யோகராசா நளினி (வவா)
(சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் – சமுர்த்தி மகா சங்கம் – சாவகச்சேரி)

மனம் மகிழ
04.12.1973

மனம் நெகிழ
04.02.2026

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று 06.03.2026 வெள்ளிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பத்தினருடன் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் பிரிவுச் செய்தி கேட்டு உடன் வந்து ஆறுதல் கூறியும் இறுதி நிகழ்வுகளில் கலந்துகொண்டு சகல வழிகளிலும் ஒத்தாசை நல்கியும் எமது பிரிவுத் துயரில் பங்கு கொண்டவர்களுக்கும் தூர தேசத்திலிருந்து தொலைபேசி மூலம் எம்மைத் தொடர்பு கொண்டு ஆறுதற்படுத்தியோருக்கும் துண்டுப் பிரசுரங்கள் மற்றும் கண்ணீர் அஞ்சலிப் பதாதைகள் மூலம் அஞ்சலி செலுத்தியோருக்கும் அஞ்சலி உரையாற்றியோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிலிப்ஸ் வீதி, சந்திரபுரம்,
மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

(6971)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தால் இல. [illegible] என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.03.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.